# சென்னிமலை
# ஆண்டவர் காதல்.

## (தைப்பூசக்கதை.)

முதற்பதிப்பு 2000 பிரதிகள்.

B. P. சாம்பமூர்த்தி அய்யரால்
ப்ரசுரிக்கப்பட்டு,

ஈரோடு ஸ்ரீ கிருஷ்ணா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

**1924.**

~~All~~ Rights Reserued.

விலை அணா 4.

# முகவுரை.

இக்காதற் பாக்களை பிரதிவருஷமும் தைப்பூசத்திற்கு சுமார் ஒருமாதத்திற்கு முந்தியோ அல்லது அதற்கு முன்னாடியோ இருந்து சென்னிமலைக்கோயில் தாசிச்சிறுமிகளுக்குப் பாடம் செய்வித்து தைப்பூச உற்சவகாலத்தில் சுவாமிக்கு முன்னால் அச்சிறுமிகளைச் சொல்லிக்கொண்டுபோகச் செய்வது வழக்கம். ஆனாலிப்போது அது நின்று விட்டது என்று சொல்லலாம். ஏனெனில், நான் ஒருவருஷம் தைப்பூசஉற்சவத்துக்கு சென்றிருக்கையில் நான் கவனித்தவரை சுவாமிக்கு முன்னாலிவை சொல்லிக்கொண்டு போகப்படவில்லை ஆதலாலும், இவைகளின மூலப் பிரதிகள் தாசிகள் வீட்டிலிருந்து வாங்க நேர்ந்ததாலும் இவை எவ்விதமாயினவென்று யாருக்குமிப்போது அதிகமாய்த் தெரிந்திலதென்று நினைக்கிறேன்.

ஆனாலிவை அத்தாசிச் சிறுமிகளும் அவர்கட்கு கற்பித்தவரும் அறிந்திருப்பது போதுமானதன்று. இவை மறைந்து போகாவண்ணமும் சென்னிமலைக்கோயிற் குடிகளும் தமிழறிந்தோர் யாவரும் படித்தறிந்திருப்பது நலமென்றும் சந்தோஷத்தோடு கொடுக்கப்பெற்ற இரண்டு ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு எழுதி காலஞ்சென்ற மகா-ள-ள-ஸ்ரீ வீராஜி மங்கலம் கந்தசாமி கவிராயரவர்களின் மாணாக்கரிலொருவரான பிர்மஸ்ரீ G. ஜகநாத அய்யரவர்களைக்கொண்டு எழுத்துப்பிழைகளைத் திருத்தி அச்சிடப்பட்டது. இப்ப என்னும் பதம் இப்போ அல்லது இப்போது என்றும் திருத்தியிருக்கிறது.

இப்பதிப்பில் பிழையாயுள்ள பாக்களை நன்றறியும் தமிழ் வித்துவான்கள் திருத்தி அடியில் காணும் மேல்விலாசத்திற்கு அனுப்பினால் கூடுமானவற்றை இரண்டாம்பதிப்பில் அச்சிடமிகுந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

சென்னிமலை என்பது கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு தாலுகா ஈங்கூர் ரயில்வேஸ்டேஷனிலிருந்து நாலுமைல் தூரத்திலுள்ளது

நூலாசிரியர். 19, 607-வது பாக்களில் காணுமளவே இந்நூலாசிரியர் வரலாறு தெரிவதால் மறுபதிப்பில் இவரைப் பற்றித் தேற விசாரித்தெழுதப்படும்.

16—4—24. } B. P. ஸாம்பமூர்த்தி அய்யர்,
கச்சேரி வீதி, ஈரோடு.

# பொருளடக்கம்.

1. தெய்வ வணக்கம்

2. ஆண்டவர் சிறப்பு

3. ஆண்டவர் தைப்பூச வேட்டைக்கு தேரேறி புறப்படல்

4. ஆண்டவர் வேட்டையாடுதல்

5. சிரோரத்னமணி வனப்பு

6. ஷை (ஆண்டவர் பூங்காவில் சிரோரத்னமணியை சந்தித்து சொல்லுதல்)

7. ஆண்டவருக்கும் சிரோரத்னமணிக்கும் கந்தருவ மணம்

8. ஆண்டவர் வேட்டையாடி வெள்ளையானை மீது திரும்புதல்

9. ஆண்டவர் பிரிவால் சிரோரத்னமணிக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகள்.

10. ஆண்டவருடன் சிரோரத்னமணியின் வாழ்வு.



# சென்னிமலையாண்டவர் காதல்.

## (தைப்பூசக்கதை).

### தெய்வவணக்கம்.

செங்கெனுயர் காளிநகர்ச் சென்னிமலைச் செவ்வேள் மேற்
பன்னுதமிழ்க் காதறனைப் பாடவே
உன்னுகடற்றுறைக் குஞ்சர முகத்தான்
றன்மருகன் மிக்க நெடுங்கைக்குஞ்சர முகத்தான் காப்பு.

பொன்மேவும் பூந்துறைசேர் பொற்புலவுங் காளிநகர்
மின்மேவுஞ் சென்னிமலை வேலவன்மேற் காதல்சொல 1

பூவுலகிற் சொல்லும் பொருடழைக்கப் பொன் கமலை
மேவு திருச்செந்திநாயகன் பாதந் துணையே. 2

ஓங்குபுகழ்ச் சென்னிமலை யுத்தண்ட வேலவர் மேற்
பாங்குபெறுங் காதல்தனைப் பண்புடனே பாடுதற்கு 3

சீதமதி வேணித்திருமா முகமலர்ந்த
நாதர் திருத்தார்குழலிநாயகியைத் தாள்பணிவாம். 4

சீர்ந்தமிகுஞ் சென்னிமலைச் சண்முகவேள் மன்றலெட்டின்
வாய்ந்த தமிழ்க்காந்தர்வ மாமணத்தின காதல்சொல 5

கங்கையணி தேவர் கைலாயமேவு மலை
நங்கையெனும் பெரிய நாயகியைத் தான்பணிவாம். 6

காசினியோர் போற்றுங் கமலாபுரியில் வளர்
தேசிகன்சேர் சென்னிமலைத் தேசிகன்மேற் காதல்சொல 7

வாசமார்க்கண்டீசர் மாலுமையவல்லி விசு
வேசர்விசாலாட்சி விபவிபத மெய்த் துணையே. 8

ஞாலம்புகழ் திருக்கை நாரணன் பொன் வாணியுடன்
சீலன் சிரகிரியான் செந்தமிழ்க்குவந்தருள்வார். 9

காளிநகர்க் காங்கயன்மேற் காதல் சொல்ல மேவுபத்ர
காளி பிராட்டியம்மன் கஞ்சமலர் கைதொழுவாம். 10

பொன்மாறிலாத கந்தன் சொற் புகலத் தென் கமலைப்
பொன்மாரியம்மை திருப்பொன்னடியைப் போற்றிசெய்வாம். 11

அண்டர் தொழுஞ் சென்னிமலை யாண்டவர்க்குப் பூசனை முன்
கொண்ட இடும்பக்குமரர் பதங் கும்பிடுவாம்.. 12

வாழுமலையான் கமலைவாசன் மேற் காதல் சொல்ல
ஏழுமலை மாதவன் றனைப்பொழுதும் வாழ்த்தல் செய்வாம். 13

காரணஞ்சேர் சென்னிமலைக் காங்கயன் மேற் காதல் சொல்லப்
பூரணமாந் தாரணி சூழ் பூந்துறை சேர் நன்னாட்டில் 14.
எல்லைக் கிராமம் இலங்கிய துக்காச்சி நகர்
செல்லக்குமரர் திருச்சேவடியைச் சிந்தை செய்வாம். 15.
சேர்ந்தன் சிகராசல வேள் செந்தமிழ்க்கு காங்கய நா
டார்ந்த திருமாந்தை நகர் ஐயமாரைப் பணிவாம். 16.
கங்காளன் சேயன் கவிக்கு மலையனா
ரங்காள வல்லியடி பிணைகள் காப்பாமே. 17.
வேத நெறி செழிக்க வேந்தர்கள் செங்கோல் தழைக்க
காதல் பெருஞ் சென்னிமலைக் காவலன் மேற் காதல்சொல்ல 18.
நன்மை பெறும் வேத முறை ஞான வுபதேச குரு
தன்மசிவ ஆசாரியர் பொற்றாளிணையை யடையமறவேன். 19.
சென்னிமலை வேலவர் மேற் சித்திர வித்தாரமெனும்
பன்னுதமிழ்க் காதல் முன்னோர் பாவிற் புகல்வனதான், 20.
சங்ககானனன் றேர் நடத்துஞ் சந்திரோதயத்து முன்னந்
தங்கு தாரா கணமுஞ் சார்ந்த பிரபை யொக்கும். 21.
பூமணஞ்சேர் நாரின் மணம் பூண்ட சென்னிமலையாண்டவர் மேற்
றேமணஞ்சேர் செஞ்சொல்லுந் தண்டமிழ் கைகொண்டருள்
[வாம் 22

## ஆண்டவர் சிறப்பு.

மங்கள கலியாண குண வால சுப்ரமண்ய சிவ
சங்கர குமார ஜய தண்டாயுதபாணி. 23.
தண்டலைசூழ் வண்டினங்கள் சார்ந்திடு மென்றேறண்ணி விண்ணில்
கொண்டல் முந்நீருண்டு நிரைகொண்ட சென்னிமாமலையான் 24.
நந்தகிரி நீலகிரி நாடு சதுர் வேதகிரி
வாதை கனககிரி வாழ் மங்கல கிரியான் 25.
வெள்ளிமலை நாகமலை மேவு நட்டாத்தீசர் மலை
தெள்ளுமணி மலையுஞ் சேர் சண்பக மலையான் 26.
மண்பரவுங் காஞ்சிநதி வானி* யெனு மாநதி பூஞ்
சண்பகமாநதியுஞ்சார்ந்த பொன்னி மாநதியான 27.
கன்னல் செந்நெல் வாழை கமுகு புன்னை தெய்வப்
பொன்னின் மழை பொழிந்த பூந்துறை நன்னாட்டதிபன் 28.
தாட்சிவப்பத் தென்கைலைத் தானுவுடன்றானிருந்து
காட்சிநடனமிடுங் காளிப்பதியுடையான். 29.

---

* பவானி.

சொற்பொருது மற்புயங்கள் தோய்ந்த வள்ளிதேவயானை.
பொற்புலவுங் கற்பகத்தேன் பூங்கடப்ப மாலையினான். 30
கொக்கரித்தரக்கர் தமைக் கூறைத்து மைப்பணிச்சிரத்தி
லுக்ரமிட்ட பச்சைமயிலுற்ற நடனப்பரியான். 31
வானமட்டுஞ் சேனைகட்டும் வாளரக்கர் தானெதிர்ப்பத்
தானமெட்டும் வானமெட்டித் தானடுத்தும் வாரணத்தான் 32
வாளமிட்ட சக்ரகிரிவாள மெட்டித்தாண்டியண்ட
கோளமுட்டத் தூளியிட்டுக்கூவுங் கோழிக்கொடியான். 33
எம்மூர்த்தி யெப்பொருட்கு மீய தலைவென்றிமன்றல்
மும்மூர்த்தி மூர்த்தி என்று மூதலிக்கு மும்முரசான். 34
பூரணஞ்சேர் மெய்ஞ்ஞானப் போத முறை வேத நெறி
தாரணியோர் வாழத்துஞ் சடாக்ஷர வாக்கினையான். 35
வேலாயுதனெவர்க்கு மேலாயுயர்ந்த கொடி
காலாயுதன் றேவர் கையாயுதக் கடவுள். 36
சேம மிகுந் தேவர் சிறைமீட்டுத் தேவேந்திரற்கு
மாமகுடஞ் சூட்டி வைக்கு மாணுபிஷேக பரன். 37
இம்மை மறுமை யன்பரின்ப முத்தி யுண்மை மனுச்
செம்மை விஜயஞ் செலுத்துகின்ற செங்கோலான். 38
மூவர் முதல் யாவர்களு முப்பத்து முக்கோடி
தேவர் நவ வீரருடன் சென்ற பெருஞ் சேனையினான். 39
அக்கரங்களாறு பதியானை கொம்மை வட்டமன்பர்
மிக்க கமலாபுரியின் மேனிலைப் பொன் கோட்டையினான். 40
வென்றித் திருவாவினன் குடியுமிக்க பரன்
குன்று திருச்செந்தூர் குலவு திருவேரகமும் 41
கூறு தமிழ்ச் சோலை மலைக்குன்று தோறு மாடலுடன்
ஆறு படைவீடதிபன் ஆறுமுகப் பெருமாள். 42
அஞ்சு தலை யுற்றவர் முன்னூறு தலை வைத்தவர் தன்
அஞ்சு தலைத் தீர்க்க வரு மாறு தலை யுடையான். 43
நாட்டிலடியார் கலியில் நாடாமற் றேடி யின்பங்
காட்டு மீராறு கருணைத் திருவிழியான். 44
பூர்த்தி பெறுஞ் சிந்தை புனைந்தடியார் போற்றி பெருங்
கீர்த்தி ஷடாக்ஷரச் சொல் கேட்குந் திருச்செவியான். 45
கள்ளுநறையுஞ் செங்கடப்பங் கண்ணி மணந்தோய்ந்த பொற்பு
வள்ளி தேவயானை மணந்த புயாசலத்தான். 46
சீலமிகுந் தேவர் கையிற் சேர் பதினெட்டாயுதத்தின்
மேலாயுதம் படைத்த வேலாயுதக் கரத்தான். 47

முப்பிரணவப் பொருள்கள் முக்கண்ணரிப்போ வுரை
செப்பெனவு மப்பொருளைச் செப்புங்கனி வாயான். 48

ஆய்ந்த குறிஞ்சிக் கிறைவன் ஆனைமுகவற் கிளையோன்
ஏந்திழை தெய்வானை வள்ளிக் கேற்ற மணவாளன். 49

தானினிய மாங்கனிக்குத் தந்தையார் கூறு முன்னம்
மாநிலத்தைச் சுற்றி வலம் வந்த சரணம் புயத்தான். 50

சென்னிகிரியான் கருணைச் சேதி கிரியான் மருகன்
பண்ணுந் திருவிழிகள் பன்னிரண்டான் பன்னிரண்டான். 51

சீலன் சுசீலமிகுந் தேவாநுகூலன் வடி
வேலன் மனமோலன் விமலனருள் பாலன். 52

சிந்தனை செய்வோர்கள் வினைதீர வருஞ்சென்னிமலைக்
கந்தன் சுகந்தன் கமலாபுரி முருகன். 53

வாழிய நக்கீரர் தமிழ்வாய்ந்த செவிகூர்ந்து முன்னம்
பேழைவாய்ப்பூதம் பிடித்த சிறைவிடுத்தோன். 54

பச்சை மயிலான் சூரைப்பாயுமயிலான் சேரு
மிச்சை மங்கைவாரணத்தானேறு மங்கை வாரணத்தான். 55

நாட்டிலருணகிரி நாதன் திருப்புகழ் சொற்
பாட்டின் மகிழ்ந்து படிக்காசளித்தபிரான். 56

தாலமிகுஞ் சென்னிமலைதன்னில் வளர் கல்யாண
வாலசுப்பராய னென்று வாணர்புகழ் வாசலினான். 57

தேக்குமிந்திரன் வானோர் திருமாலயன் முனிவோர்
வாக்குவரங் கேட்க நித்தம் வலம்புரியும் வாசலினான். 58

சந்திரரும் சூரியரும் தங்கள் குறை தீரவென்று
வந்துலவி நித்தம் வலம்புரியும் வாசலினான். 59

பூமலர்கள் விண்ணோர் பொழிய நறுஞ் சந்தனஞ்சேர்
மாமலையைத் தென்றல் சுற்றி வந்துலவும் வாசலினான். 60

செம்மைபெறுந் தெய்வ மின்னார் செங்கை மலர்க்கையால் வலந்த
மம்மனை பந்தாடல் விளையாடு மணி வாசலினான். 61

வேத முழங்கும் விருது முழங்கும் மெய்ஞ்ஞானப்
போத முழங்கும் பொருள் முழங்கும் வாசலினான் 62

நேயங்கொடுக்கும் நிதி கொடுக்கும் நித்தியம் நல்
வாய்மை கொடுக்கும் வரங்கொடுக்கும் வாசலினான். 63

ஞானங்கிடைக்கும் நலங்கிடைக்குமன்னம் சொன்ன
தானங்கிடைக்கும் தவங்கிடைக்கும் வாசலினான். 64

சந்தானபாக்யஞ் சகல சௌபாக்கியமிக
நந்தாமனிலத்தில் நல்கு திருவாசலினான் 65

சைவசமயநெறி தான்றழைக்கத் தின்னடியார்
தெய்வவெண்ணீ றஞ்செழுத்துந் தேசமெங்குங் கொண்டாட. 66
வந்தபிரான் சென்னிமலை வாழ்ந்தபிரான் பைந்தமிழ்ச்சீர்
தந்தபிரானெம்மையென்றுந் தானடிமை கொண்டபிரான் 67
பொன்புனை மாமேருவைப்பெயர்த்து முடிபடைத்த
தென்புபெறு மாதிசேடன் சினந்தவிர்த்தோன். 68
பேசுந்தமிழ்வலையம் பெற்ற முனிவர்க்கு முப
தேசம் புகலவருந் தெய்வச்சிகாமணியான். 69
கம்பீர மாதளை பூந்தாழை நெல்லி சண்பகம்
வம்புறை தேங்கோங்கு மகிழ் கூபமி பாதிரியும் 70
தேன்பாயும் வாழை பலா தேங்கமுகு மோங்குபுன்னை
வான்பாயுஞ்சோலை வளம்பாயுஞ் சாரலினான். 71
சுற்று மயில்வாகனத்தின் றாவிமணிக்கம்பமும் பொன்
சித்திரமதில் மண்டபமுஞ் சேர்ந்த நிலைக்கோபுரமும் 72
மெய்ப்புடனேயாவர் மிருந்தாணபானமும் பொன்
தெப்பத்திருநாள் சிறந்திடுந் தெப்பக்குளமும் 73
நல்ல தண்ணீர்ப்பொய்கை நறுநந்த வனத்தழகுஞ்
சொல்லரிய கன்னல் செந்நெல் சூழ்ந்த வயல் வளமும் 74
செம்மைபெறு மாடவருஞ் சேயிழையுஞ் சேர்ந்திலங்கும்
அம்மனைக்குளம்மானைகளாடுந் திருநகரும் 75
காரணியில் நால்வருணத்தார்கள் மனை நீள் மகரத்
தோரணங்கள்கட்டித் துலங்கு திருவீதியினான். 76
கையாதவட்டி கருநொச்சி வெண்சாரை
மெய்காணுபபொய்கை சித்தர்மேவுஞ் சிரகிரியான். 77

## ஆண்டவர் தைப்பூசவேட்டைக்கு தேரேறி புறப்படல்.

தைப்பூசங் குறவள்ளி தேவயானையுடன்
வைத்தப்பூசநாளில் மணஞ்சார்ந்த கொலுத்தானிருந்தோன் 78
தண்டமிழ்சேர் சென்னிமலை சேர் தானிகருஞ் சென்னிகிரிப்
பண்டிதருங் கோவிற் பரிசனருந் தான்போற்றி 79
சுத்தி புண்யவசனமும் தூப தீபங்களுடன்
நித்திய அபிஷேகம் நைவேத்யந் தான்முதலாய் 80
சேருமலங்கார தீப ஆராதனையுமுப
சார் வேதாகமும் தானிகர்கள் தான்புரிய 81

கோலமிகும் வேத்திரங்கைகொண்டு கட்டியங்கூறச்
சீலமிகுஞ்சைவர் திருத்தேவாரந் தானோத 82
தாளமத்தளம் பேரி தாரை தவில் நாகசுரம்
மேளவாத்யங்கள் பலவிந்தை விந்தையாய் முழங்க 83
இங்கிதஞ்சேர் வேணு குழலேற்றதித்தி நீடுசுத்த
சங்கீதம்பாடி எதிர் தாசிகளாடிவர 84
சூரியவாணர் துலங்கு ருத்திராக்ஷக்குடையும்
வீரியஞ்சேர் பொன்விசிறி வெண்சாமரையிரட்ட 85
வேட்டுவெப்பாவாடை நிழல்வீச மருந்திட்டகுண்டு
பூட்டும் வெடிதண்டு குழல் பொட்டிட்டாலியின் வேட்டதிர 86
வெண்பகல் வத்தியுடன் மின்னு தீவட்டிப்பொரி
வண்ணம் நிலவிருசின் வாண வேடிக்கையுடன். 87
ஆட்சிபெறும் பரிசூரகிராண்ட தீக்ஷிதர்தாட்
காட்சி பெறப்போற்றிசெயுங் கங்காகுலசீலன். 88
வாய்ந்த புகழ்ப்பூந்துறை சைமகல் வாரணவாசி
வேந்தன் திருத்தேர் முன் வந்து வேண்டி வடம் பிடிக்க 89
உண்மைபெறும் வெள்ளோடை ஓங்கு நசையனூர்
வண்மை எழுமாத்தூர் மகிபாலகர் மிகவும 90
பூந்துறை நாட்டோர் போற்றிசெய்ய நாற்றிசையிற்
சேர்ந்த கொங்க நாட்டோர் சிந்தைகளிகூர 91
சித்தமிகுஞ் சென்னிமலைச் சித்திரநால் வீதிசுற்றி
வித்தகத்தேரேறி வருமெய்ஞ்ஞான வேல்முருகன். 92
பொன்னி நவரத்னமணி பூண்டிடுஞ் சிங்காதனத்திற்
சென்னிமலை வேலர் சிறந்து தினந்தினமும் 93
மேதினிகளெங்கும் விளங்கச் சடாக்ஷரச்சொல்
ஆதிபத்தியஞ் செய்தருள் புரியுமந்நாளில் 94
மிக்க பொன்னிரோடி விந்தையுடை கட்டிநுதல்
தக்க வெண்ணீறிட்டு மணித்தாவடங்கள் தானணிந்து 95
செய்ய சிவதவமுஞ் செய்து சிவார்ச்சனைகள்
செய்யும்வகை முஸ்தீதுகள் செம்மைபெறத்தான் சேர்த்து 96
சென்னிமலை விநாயகனைச் சிந்தைசெய்து தென்கமலை
மன்னு மார்க்கண்டேசர் மாலுமைய வல்லியையும் 97
ஆவலுடன் பூசனை செய்தன்பினுடன் பின் சகல
தேவருடன் கூடியின்பஞ் சிந்தை பெறத்தான் கூர்ந்து 98
ஆறுசுவை வர்க்க வகையன்னமுடன் றானுகந்து
கூறும் வாய் கைகால் குளிர்ந்த பன்னீர் சுத்திசெய்து 99

தெள்ளுமணி மண்டபத்திற் சிங்காரமாயிருந்து
வெள்ளிலை பூகிபலமும் விந்தையுடன் தானருந்தி 100
பங்கயன் மாலிந்திரன் பணிந்து சதுர் நிறைந்த
சிங்கம் சுமந்த மணிச் சிம்மாஸனத்திப வேள் 101
தேட்டமிகு மெட்டாந் திரு நாளினிலப்பாரி
வேட்டைக் கெழுந்தருளும் வித்தார முத்தையனும் 102
மெய்ப்புடன் வான் சூர மாமுன் வேட்டை விளையாடிவர
இப்பவுங்கான் மான் வேட்டை எய்துவர வேண்டுமென்று 103
வள்ளிமான் வேட்டை மகிழ்ந்தாடு மாசையினாற்
புள்ளிமான் வேட்டை புரிந்துவர வேண்டுமென்று 104
ஆறுமுகன் சென்னிமலை யாண்டவர் முன்னின்ற கட்டியக்
காரருடன் மான் வேட்டைக்காரருக்குச் சொல்லுமென்றார். 105
தானபதியாகத் தானவர் கோன்பால் நடந்து
சேனாபதி வீரர் தேவருக்குச் செப்புமென்றார். 106
கந்தர்சொன்ன வார்த்தைகளைக் கட்டியக்காரன் கேட்டு
விந்தையுடன் வந்து தெருவீதிதனில் யானையின்மேல் 107
கான்வேட்டைக்காரர் கடுகி வரவேண்டுமிப்போ
மான்வேட்டை வேட்டை என்று வாகை முரசறைவித்தான் 108
சத்தமதுகேட்டவுடன் சந்தோஷமாய் மகிழ்ந்து
வித்தமலைச்சாரலுள்ள வேடுவர்களெல்லோரும் 109
கஸ்தூரிவேட்டை செய்யத் தங்கள் தங்கள் சஞ்சீவி
முஸ்திதின் கட்டுவர்க்க முன்னிட்டார் தானையர்கள். 110
கண்டையிடுங் கச்சையுடை கட்டியே செந்தலையிலகக்
கொண்டையிடுஞ் செங்காவிக்குல்லாவுந் தொட்டிறுக்கி 111
குண்டுமருந்திட்ட பெட்டிகோத்த பட்டைவார் பூட்டித்
துண்டு சரகோபந்துப்பாக்கி வெடித்தோளில் வைத்து 112
கட்டுமெட்டாய் மேனிக்கரும்பொன் கபாய் பூட்டித்
தொட்டு விசையாய் நடக்கத் தோலடியுங்காலிவிட்டு 113
கொண்ட மதவாரணத்தை கொப்பமதில் வீழ்த்திடவுங்
கண்டெறியுஞ் சக்கரமும் கைவேட்டைக் கத்திகளும் 114
பாரவரி வேங்கைவந்து பாய்ந்திடுமுன் வாய்ந்துகுத்த
வீரமணி கட்டு நெடு வேலாயுதம் பிடித்து 115
மைவாய்க்கருங்கரடி வந்தெதிர்த்தால் வாய்பிளக்குங்
கையீட்டி சுற்றுங் கனத்த பட்டாக்கத்திகளும் 116
கோணவளை தடியும் கூரம்புத்தூணிகளும்
பூணும் நாண்பூட்டிப் பொருந்துஞ் சிலையுடனே 117

## 8 ஆண்டவர் தைப்பூசவேட்டைக்கு தேரேறி புறப்படல்.

செச்சைவரி வேங்கைவந்து சேர்வதின்மேல் விடுப்பிக்
கைச்சங்கிலிகளிட்டுக் கட்டிவரும் ஞாளிகளும் 118
பன்றி வலை மான்வலையும் பாயுங்காடைவலை
வென்றி முயல்வலையும் வேறே வலையமென்றும் 119
சிங்கிளிகள் போலக் கண்சிவந்த பசியபல்லுந்
தங்கும் வயிறு நெடியூரதாடியுமேல் மீசையுமாய் 120
வானவருந் தானவரும் மானிடரும் மண்ணும் விண்ணுந்
தானதிரச் சேனைதானுஞ் சண்முகனை வந்துகண்டார் 121
அந்தக்கணம் பொன்னலங்கிருதஞ் செய் கல்யாண
விந்தைமணி மண்டபத்துள் வேலோனெழுந்தருளி 122
பெண்ணாடிக் கூடவரும் பேரழகுக் காரிரண்டு
கண்ணாடி பார்க்க நிலைக்கண்ணாடி தான் பதித்து 123
சட்டமிகும் புனுகு சந்தனமார்பிற் பூசி
மட்டவிழ் சிந்தூரநுதல்விட்டமிட்ட பொட்டுமிட்டு 124
சுற்றிடையிற்பட்டை நிசார் தொட்டிறுக்கிச் சென்னிதனிற்
பொற்றகட்டிழைத்த பொன் சரிகைப் பாகு கட்டி 125
விச்சித்திரத் தகட்டின் வெண்கபாய் மெய்யிலிட்டுக் கைக்
குச்சித்திரப் பொன்னின் கடகம் விரல் மோதிரமும் 126
கிண்கிணிப் பொன்தண்டைக் கிண்கிணெனக் காலிட்டுத்
தன்புனையுங் கால் விரலில் தங்கமிஞ்சி தானுமிட்டு 127
இச்சையுடன் காதிலிணங்க முருகணிந்து
வச்சிரகேயூர. மகரக்குழை சாற்றி 128
கோர்வையிட்ட கண்டசரங்கொத்துச்சரப்பணிப் பொன்
மார்பிற் பளபளென வச்சிரப்பதக்க மின்ன 129
மார்பிலிட்ட முந்நூலின் மார்பின் வல்லவாட்டு மிட்டுக்
கோலவட்டப்பாகில் முத்தீக் கோத்தணித்தூரவு மிட்டு 130
நாரிவள்ளி தெய்வயானை நாயகனார் கோடி சந்திர
சூரியன்போல் மெய்கள் துலங்கும் பணி திருத்தி 131
விற்கடகந் தண்டம் வேல்வாள் பரிசை சக்ரமுஞ்
சொற்சமுதாடங்குசமுஞ் சூலம் பராயுதமும் 132
ஆறிரண்டு செங்கைதனில் ஆயுதமுந் தான் பிடித்துக்
கூறுமுக மாறிலின்பங் கூர்ந்து மொழிதான் பேசி 133
தாய்பெரிய நாயகியைத் தந்தை கைலாசனையும்
வாய்மையுடன் போற்றி யவர் வாழ்த்தி விடைகொடுக்க 134
பொன்னின்மலை மீதிற் பொதிந்த மணி மலை போலச்
சென்னிமலை வேலவனார் சித்திர மயில் மீதேறி 135

தாமம்நிறைந்த திருச்சந்நிதியின் பின்பு நெடு
மாமணிப்பொன் கோபுர முன்வாசல் தனில் வந்து நின்றார். 136
நந்தி கணநாதர் குரு நாதர் விநோததுரை
தந்தா பாரக்கென மூன் கட்டியங்கள் தான் கூற 137
வையமெல்லாம் போற்று திருமால் மருகனென்று செஞ்சொல்
தூய்யமலர் வேதன் சுருதி முறை தானோத 138
வாய்ந்த அருள் வெள்ளிலையும் மாரவேள் தான் கொடுக்க
காந்தர்வர் வெண்படிக்காளாஞ்சி தானேந்த 139
தம்புருவை மீட்டி யெங்கள் ஷண்முகனென்றே வாழ்த்தி
தும்புருவும் நாரதரும் சுத்த சங்கீதம் பாட 140
வந்துநவ வீரவாகு லக்ஷம் வீரருடன்
சொந்தமிகுஞ் சேனைக்கொடிதாகை வகைகள் தான் கூற 141
விந்தைபெறு முக்ரராண வீரபத்ர நாதனுடன்
பந்தமிகு மட்டதிக்குப் பாலகர் சண்டாயுதனும் 142
காழ்ச்சி பெறுச் சண்முகன்பால் தான் சகல தேவர்களும்
வாழ்த்தி மிகத் தங்கள் தங்கள் வாகனத்தின் மீதேறி 143
விண்டுலவுஞ் சென்னிமலை வேலவர் முன் வல்லிடும்பன்
தண்டமானங்காரத்தில் தாங்கிப் பணிந்து நிற்க 144
கம்பத்தானைத் தடிந்த கண்ணன் கைச்சங்கமதக்
கும்பத்தானைத் தடங்கைக் கொண்ட மணிக் கொம்பூத 145
வண்மை முரசம் வளைந்த முதுகில் கிரங்கு
முண்மை யொலி விண்மிசை யென்றெட்டக மண்ணதிர்ந்துவர 146
வானடங்காத் தானவரை மட்டடங்கா வெற்றி கொண்டு
தானடங்கான் வாசி மிசை தானடங்கத் தானதிர 147
கொட்டமிட்ட கண்டகரைக் கொட்டமிட்டு மிந்திரன்றன்
பட்டமிட்ட வெற்றியுந்தன் பட்டந்துடி முழக்க 148
நல்லோர் வாய்ச் சொல்லுறியா நாவின் வாய்ப் பொலிவாத
மல்லாருஞ் சத்தமெனு மல்லாரி சத்தமிட 149
இந்திரன் பொன்னுடு குடியேற்றுந் துரைக் கந்தனென்கோன்
வந்தான் வந்தானெனப் பொன்வாங்காத் தொனி தெரிக்க 150
உன்னுகடல் வெஞ்சூரர் கிரௌஞ்சகிரி வேல் துளைத்த
சின்னவின்ன மென்று திருச்சின்ன முன்னந் தானூத 151
பைந்தமிழ்ச் சொல்லோதிய சம்பந்தராயத் தந்தை நந்தை
விந்தைகூழுத்தின் பந்தல் சித்தர் வித்யாதரர் தாங்க 152
சுந்தரஞ்சேர் தன்னடியார் துன்ப விருள் மாற்ற விண்ணில்
சந்திரன் போல் இந்திரன் தான் பூச்சக்கிரக் குடை நிழற்ற 153

வேலைவட்டமிட்ட வெய்யோன் வீறடங்க விண்ணோர் வந்
தாலவட்டந் தன்னில் மிகுந்தாலவட்டந்தான் பிடிக்க 154
வையகத்தி லன்பர்தமை வாவென்றழைப்பது போல்
மெய்யிலகும் விஞ்ஞையர் கை வெண்சாமரை யிரட்ட 155
நீதச்சிவிச்மயி நிந்தனைத்தூள் நீக்குதல் போல்
பூதக்கணத்திபர் கை பொன் விசிறி தான் வீச 156
சத்திவடி வேலவன்றன் தன்னடியார் முன்பவத்தைக்
கொத்தித் துரத்துவதுபோல் கோழிக்கொடியாட 157
கூட்டமிட்ட சேனையர் கால் கொள்ளாமல் துள்ளியுமான்
வேட்டைத்துடி துடித்து மீட்டுந்துடியடித்தார். 158
வேலர்வலை யிருக்க சென்னி வேலர் மணக்
கோலாகலக் குறமின் குஞ்சரியைத் தானிருத்தி 159
குஞ்சரமின் வள்ளி பங்கன் கோபுர முன் வாசல் தனைக்
குஞ்சரத்தைத் தண்டனிட்டுக் கோபுர வாசல் கடந்து 160
வானடத்துந் தேரிரவி வாய்ந்ததென வேலர் மயில்
தானடத்தச் சூழ்ந்து நின்ற தானையருந் தானடந்தார். 161
ஆறுமதிகொண்ட சடை ஐயர் கைலாசருக்குக்
கூறுபுலியாசனங்கள் கொண்டுவர வேணுமென்றும் 162
ஆழியைக்கண்டானு மடர்ந்தவடிவேலவனார்
தாழிப்பதக்கம் தனைவாங்க வேணுமென்றும் 163
தஞ்சமிருஞ் சண்முகவேள் சாரிவரும் தண்டிகைக்குக்
குஞ்சரத்தைவென்று கொம்பு கொண்டுவர வேணுமென்றும் 164
வந்தகருங்கரடி வாய் கிழித்து வேலரிடம்
சந்தோஷமாய் விருது தான்வாங்க வேணுமென்றும் 165
தெய்வானை வள்ளியுமை சீரார் குழல் முடிக்க
மைவாள் கருங்கவரி வால் துணிக்க வேணுமென்றும் 166
முந்தாமல் பிந்தாமல் முத்தையவேள் பக்கல் நின்று
சந்தோஷமாய் வேட்டை காண வேணுமென்றும் 167
வாரிதிரண்டெழுந்த வண்ணமாய்ச் சேனையர்கள்
வீரியமாய் வேட்டை செயயும் விஸ்தாரந் தான்பேசி 168
தேடிபபணிபுரியுந் தண்டாயுதக் கடவுள்
வேடிக்கையாகவே மான் வேட்டை வரு மார்க்கமதில் 169
சந்தமுலைக் கன்னி மின்னார் தண்ணீர்க் குடமிரண்டு
வந்தொரு காட்டான் வலிப்பால் வாய்ந்திடத்திற் பாய்ந்தேற 170
விண்கொள்ளாச் சென்னிமலை வேலவர் கண்டாரதன் முன்
கண்கொள்ளாச்சேனையிலோர் காவலன் கண்டாய்ந்தறிந்தான். 171

கைகட்டி வாய்புதைத்து கண்டறிந்த சொல் நிமித்தம்
மைகட்டு சென்னிமலை வள்ளல் முன்னம் வந்து நின்றே 172
வட்டவரிக்காடான் வலங்கொண்டிடத்தில் நெட்டாய்க்
கட்டினதால் கான்மான் கனவேட்டைதானிகிடைக்கும் 173
கோதையரிருவர்சேர்க்குடங் கொண்டெதிர் வரவே
காதலவன் காந்தருவக் கலியாணம் கூடுமென்றான் 174
சொல்லுரை கேட்டுளமகிழ்ந்து தூயசிகராசலத்தான்
வல்லமையாய் நீலமலைச்சாரல் வந்தணுகி 175

## ஆண்டவர் வேட்டையாடுதல்.

காப்பிட்டு நாற் பாங்கும் காடு சுற்றி கட்டிமலைக்
கோப்பிட்டுத் தூண்டுக் குழற்காரரை நிறுத்தி 176
சித்திரமயில் விட்டிறங்கிச் செவ்வேள் படை செலிப்ப
சத்தமுரசங்கள் சத கோடி போல் முழக்க 177
ஆக்ரமித்து நீலகிரி யவ்வனம் சென்றாள் பறக்கக்
கூக்கையிட்டாரோடிக் குரவையிட்டார் நாற்புரங்கும் 178
சுண்டு வில்லுக்காரர்களும் தூணியம்புக்காரர்களும்
கண்டு மிருகங்கள் கலந்து தடிதடித்து 179
சென்னிமலை கண்டவர்முன் தீவினை போல் மான் முயல்கள்
பின்னும் வலை கண்டு புரண்டு விழுந்தோட 180
கொல்வாருமோடிக் குறுக்கிட்டு வீரவசை
சொல்வாரும் வெட்டித் துணிப்பாருமாய் நெருங்க 181
கொண்ட பெண்டிருக்கஞ்சிக் குலவிருந்தைப் பின் போக்கும்
கண்டகர் போல் வேங்கை தளங்கண்டோர் புறமோடுதல 182
செய்யசிவன் பணியைத் தீது புரிந்தோரை வினை
செய்வதுபோற் பன்றி வதை செய்தார் சில வீரர். 183
தூயசிவ நிந்தனைகள் சொல்லில் யமன் போற் குறவர்
பாயுங்கரடி பலவாய் சிதைத்து விட்டார். 184
ஆலக்கழுத்த சொத்தை அஞ்சாமலுண் புலியை
காலப்புலி வேட்டை கொளவும் புலியைச் சிதைததார். 185
பவ்வினையாள ருயிர் பற்று மெமன் போல் ஞாளி
கௌவியிழுக்க வதின் காலில் விழும் மான் மறிகள். 186
தண்ணீர்த்தடாகந் தன்னில் அழும்புற்றோரை யமன்
பண்ணும்வதை போல் வீரர் பல மிருகம் தான் சிதைத்தார். 187

செய்யவனப் புள்ளினங்கள் செந்தமிழோர் தியாகியர்கள்
கைகண்டாலோடுங் கலி போலப் பறந்தோட 188
வேடக்குறவர் திறவேட்டுவர் பின்பால் மிருக
மோடத்துடர் கிடையாதோடச் சிலைபோட 189
சுட்டவெடி யிட்ட தொனி சுற்று வரை எட்டதிர
பட்டுமுடி நட்டரவு பைக்குள் மணி கக்கி விழ் 190
குன்றமதத் தந்த வெறி கொண்ட புலியுங் காடி
பன்றியருணன் கலைபதுங்க முயலுங் கதற 191
ஏனம்புலி காடி ஏன மிருக்கை விட்டு
மானமழிந்து வலைக்குளகப்பட்டோமோ 192
என்று பெரும் புலியு மேனங்காடி வனம்
சென்று விற்றந்தோடு மதைச் சேனையர் கண்டே தடுத்தார், 193
தண்டையிட்டுத் தாலவட்டம் தானடித்து மெய் சிலுத்துக்
கொண்டுநெடு வாய் விரித்து கூறு குரல் போல் முழக்கி
தாங்கிப்பாய்ந் தேர் புலிமேல் தாண்டித்தான் சேனையவர்
ஓங்கித்தான் கோலி விட மார்பூன்றிப் பாய்ந்தோடியுமே. 195
சென்றுகருங் காடி தேகந் துளைத்து நெடும்
பன்றியுடனும் கிழிய பட்டுருவிப் பாய்ந்ததுவே. 196
கோட்டுமருந் திரட்டைக் குண்டு கட்டித் தேர்ட்டியன்
விட்டமட்டத் துண்டு குழ்லேற்ற வெடி வேட்டதிர 197
நீளுமுடி நீலகிரி நீங்காமல் நாளும் வெகு
நாளுங்குடி மேவு சிங்காசன் செவி கேட்க 198
இச்சைமிருகாதிபதி என்று மலைச்சாரிபினில் காம்
அச்சமில்லாதே யிருந்து மார்லி மீதே தென்றெழுந்தே 199
கண்டுகவ வீரர் வந்து கை கொட்டிக் கொக்கரித்துக்
கொண்டுமுகில் மின்னெனும் கார் கோடையிடி போல் முழக்க 200
சாடியெதிரோடி யரிதாவ நெடு வீரர்முன்
தாடிவடி வேலினுட லூடுருவி யோடவுமே 201
தாக்கவரி நோக்குமுனை சாய்த்த வடிவேற் கடவுள்
பார்க்கநெடு வேற்குமரர் பாய்ந்தரியை வீழ்த்திட்டே 202
மாலெடுத்த பொன் சூரலை மார் கிழித்ததோர் வேலர்
மேலெதிர்த்த சிங்கமதைக் வீரர்களும் வெட்டி விட்டார். 203
அண்டர்பிரான் சென்னிமலை ஆண்டவனார் வேட்டை வெற்றி
கொண்டதுவும் சேனையின்பங் கொண்டு வெற்றி வேட்டதிர்க்
தார். 204
மேல்வனம் மேலம்புலியும் வேதவனனின் கலையும்
மால்வன மால் மானும் மருண்டு மனிதேற 205

விந்தைபெறு மாலியானை வேட்டை விளையாட நீங்கிகளின்
தந்திவனச் சார்புகண்டு சூழ்ந்த கொப்பம் வெட்டிவிட்டார். 206
வேழமொன்று கண்டு மிரண்டு துணை மூத்த பிள்ளை
வேழம்போல் நின்றிடும் செவ்வேள் முன் வந்தோடவுமே 207
காதல்பெற வாழ் தாருகாவனத்தி லெந்தை மட
மாதவர்மால் கொள்ள முன்னம் மாதவர் செய் வேள்வியினால் 208
வந்தமத வாரணமோ மன்னு தெய்வானை மின்னைத்
தந்தமத வாரணமோ தானென்றதை விடுத்தார். 209
வள்ளி தெய்வானை மன மகிழக் கானவர்பால்
பிள்ளை மத வேழம் பிடிக்க விடை தான் கொடுத்தார். 210
கந்தன் சிரகிரியிற் கந்தனுந்தன் சேனையுடன்
அந்த நெடுஞ் சார்பு கடந்தப்புறம் பின்னோர் வனத்தில் 211
எம்மான் மனதுக்கினிய சிரோரத்னமணிச்
செம்மானை வேட்டை செய்யத் தேடிவருஞ் சீமான் போல் 212
காடுகட்டி வேட்டை செய்யும் கந்தர் முன்னந் தானொருமான்
சாடும்வலை கட்டறுத்துத் தாண்டிக் குதி குதித்து 213
முன்னிட்ட மாற்றார் முனைக்குப் புறங்காட்டிப்
பின்னிட்டுக் கால் வாங்கும் பேடியைப் போலோடியதே. 214
சூரமான் முன்னோடத் தொடர்ந்தடர்ந்த வேலர் வனத்
தோர்மான் முன்னோடவுங் கண்டோடி விரைந்தே தொடர்ந்தார். 215
பெம்மான் கைமானோ பெருமை வள்ளி மானையருள்
செம்மானோ வம்மானைத் தேடிவரு பொன்மானோ 216
கால்விரைந் தோடுங் கொடிய கான்மான் போமோவெனப் பின்
மேல்விரைந் தோடிப் பாய்ந்து விற்கணையுந்தான் பூட்ட 217
கண்டுமட மானொதுங்கிக் கால் தளர்ந்து மெய் நடுங்கக்
கண்டிரங்கி யம்மான் கணை தொடுக்காதே விடுத்தான். 218
ஆரவடக் கொங்கை யதி மோக தாகமெனும்
தீரவிடாய் தீரவருஞ் சென்னிமலை வேலர் முன் 219
ஆறுபடை வீட்டிபுரான வரகுமாரனுந்தன்
மீறுபடை வீடு விடுதி விட்ட பாவனை போல் 220
தேசாதி தேசமதில் செம்மையாய்ச் செய்த சிவ
பூசாபலன் கிடைத்த பூம்புனல் பூங்காவனுங்கி 221
சந்தமலர்ச் சுனை நீர் தான் பருகிச் சோலைதனில்
விந்தைபெருஞ் சோலை வளம் பாயும் சாரலினுன். 222
கோமுனிக்குச் செந்தமிழ் நூல் கூறு முருகேசனென்று
மாமலையைத் தென்றல் சுற்றி மாமுகத்தில் வேர்வை சிந்த 223

காங்கயவேள் மெய் குளிரக் கந்தனருஞ் சந்தனம்
பூங்கமழ் தேன் சோலை மண்ணும் பூமாரி போற் பொழிய 224
வேலவர்க்கு மாலையிட மெல்லி நல்லாள் கை நீட்டுங்
கோலமெனக் கொன்றைக் குளிர் நறும் பூங்கொத்தாட 225
கிஞ்சுகவா யஞ்சுகப் பைங்கிள்ளை யுள்ளங் கொள்ளவுஞ் செம்
பஞ்சுகமாய் பஞ்சரைப்புப் பாடல் மேற் பாடல் சொல்ல 226
காமியென்னைத் தூதுவிட்டாள் காதல் கொண்டுன் பாலில் வெட்கி
தாமமெனும் பூமலரைத் தாளுடுந் தேனுட 227
கந்தர் கேளிவ்வனத் தோர் கன்னி மின்னாள் பூவெடுக்க்
வந்தாள் தாவென்ற சொற் போல் மாங்குயிலுந் தான் கூவ 228
வல்லிமின்னாள் சாயல் வடிவதனை வேலர் முன்னே
சொல்லுவமென் றோடிவந்து தோகை மயில் நின்றாட 229
தாவுமலர்ச் சோலை வளந் தான் கண்டிவ்வி மனம்
மேவு சென்னிமாமலைச் செவ்வேள் விரும்பும் வேளை தனில் 230

## சிரோரத்னமணி வனப்பு.

பூதலத்தில் நான்குவகைப் பெண்ணன்னையார் தன்னிலு முன்
மாதர் சிரோரத்னமணி மாலையெனு மோக மின்னாள். 231

மாரனுபகார முனுவின் பிரகாரம்
மாரனதிகாரம் வாழ்த்துகின்ற சிங்காரம். 232

பூமன் மெய்ஞானம் புகலும் ரூபத்தியானம்
பூமகி தானம் புரியு மலர்ச் சந்தானம் 233

வெளிரதி கோத்ரம் வேதாகம சாஸ்திரம்
வெளினிரு நேத்ரம் விளங்குகின்ற சற்பாத்ரம் 234

சித்தசன் மாதங்கம் செழிக்கு மதிகப் பிரசங்கம்
பித்தரை மாத்தங்கம் படைத்துரைக்கேறுத் தங்கம் 235

செங்கை மெழுகு கட்டிச் சிற்பனுருச் செய்யாமலப்
பங்கயன் செங்கையால் படைத்த பசும் பொற்பாவை 236

பேசாமலோவியன் கை பெற்றெழுதிக் கூசாமல்
வாசாமகோசரமாய் வார்த்தை சொல்லும் ரூபசித்ரம். 237

நாரிலினத்து நலியாமற் புக்கிதலை
யாரமணி மாலை யணியு முலைப் பூமாலை 238

கைபரிவாள் கொண்டு வெட்டி கண்டதுண்டங் கொள்ளாமல்
செய்ய தவத்தோர் விரும்பும் சிந்தை ரசக்கரும்பு. 239

ஆதவனால் வாடாமலாடகப் பூம் பந்தலிட்டுச்
சீதளமாய் வாடை செழிக்கு மருக்கொழுந்து 240

ஊராலை நீர் பாய்ந்துலகாய்ந் தன்னை தந்தை
பேராசையால் சேர்ந்து பெற்றெடுத்த பொற்பாகு 241

வண்டு தேனுண்டு மிராளாமல் வாய் மதுரங்
கண்டு தேனுண்டு இதழ்க் காமரசப் பூ மலர்த்தேன் 242

ஓடிமலைச் சார்பி லுலவாமல் சித்ரமணி
மேடையின் மேலோடி விளையாடுந் தோகை மயில் 243

செம்பொன்னார் மேடைதனிற் சேர்ந்து முகிற் கஞ்சாமலக்
கொம்பன்னார் கூடிக் குலாவுங் குயிற்பேடு 244

மிக்கமரப் பஞ்சரத்துள் மேவி மொழி குன்றாமல்
கொக்கோக சாஸ்திர விதங் கூறுங் கிளியப்பேடு. 245

வெள்ளையன்னஞ் செல்ல நடை வேண்டிய தாமரையினிற். பொன்
பிள்ளையன்ன மென்று நடை பேசு மனப்பேடு. 246

கொண்டல்துளி யுண்டுநொந்து கூர்ந்து துளை கொண்டிலகில்
கண்டுவிலை கூறாத கட்டியக் கட்டாணி முத்து 247

தேராத ஞானத்துரவோர்கள் தொகையாவும்
சோரமன வயிரஞ் சேரவரு மாவயிரம் 248

காய்ந்த மதனுருவங் காண வருமிர்தியுரு
வாய்ந்த சிரோரத்னமணி மாலையெனுஞ் சீவரத்னம். 249

வண்ணமலர்க்கு மணம் போல மண மலர்க்கு
கன்னியர்போலக் கன்னியர்க்குக் காதலர் போற் கன்னி மின்
[னாள். 250

மின்னுமுதற் பாங்கியரில் வாழ்திலத வல்லியெனுங்
கன்னியொரு சொற்பனம் நான் கண்டு விழித்தேனென்றாள். 251

ஆறுமுகனை னைவு மஞ்சாதே என்று மனத்
தேறுதலை சொல்லி எந்தன் செங்கை பிடித்தானொருவன். 252

காரிகையே என்று சொல்லக் கன்னி முதற் பாங்கி சொல்வாள்
காரியம் நின் கல்லியாணம் காரியம் கைகூடுமென்றாள். 253

சொல்ல மனமகிழ்ந்து தோகை சிரோரத்னமணி
வல்லி செழும்பூங்கான மலரெடுக்க வேணுமென்று 254

வாசப் பரிமளங்கள் மஞ்சளுடன் சேர்த்தரைத்து
பூசிப் பன்னீர் குளித்துப் பூங்கொடியாள் மேனியின்மேல் 255

கஸ்தூரி சாந்து களபாதிகள் பூசித்
தஸ்தூரிக் கண்டை வெள்ளைச் சல்லாத் துயிலுடுத்து 256

காதலுடன் தாதியர்கள் கையால் சிணுக்ககற்றிக்
கோடுவகுப் பெடுத்துக் கோலக் குழல் முடித்து 257

வானுதற் பொட்டிட்டு வரி விழிக்கு மையுமிட்டுப்
பூணுமுலைத் தொய்யலிட்டுப் பொன்னடிக்குப் பூச்சுமிட்டு 258
கொண்ட சாணும்புயத்திற் கோல நவரத்னமணி
தண்டை சிலம்பிட்டுத் தழைத்த சதங்கையிட்டு 259
புற்றரவினல்குல் படப் பூங்கொடியாள் பூண்கலையின்
சிற்றிடைப்பொன் மேகலைஞாண்சேர்ந்த வொட்டியாணமிட்டு 260
மேலான கால் விரலின் மெட்டி மிஞ்சி பட்டையிட்டுக்
காலாழியிட்டுக் கனத்த மயில் பீலியிட்டு 261
பொன்கடகங் கங்கணமும் பூண்சரியும் வெள்வளையல்
முன்கைபவளம் மோதிரங்கள் தானுமிட்டு 262
தண்டரளஞ் செம்பவளத் தாவடம் பொன்னட்டிகையுங்
கண்டமதிலிட்டு மச்சுக்கட்டு முலைக்கச்சு மிட்டு 263
செப்பரிய காதில் சிறந்த பலவொளியிட்டு
கொப்புச் சிமிக்கி ரத்னகுந்தளப் பொன்னோலையிட்டு 264
முத்தமிடத் தூக்கு முத்து மூக்கில் தளுக்குமிட்டுக்
கொத்துமலர்க் கொண்டையில் பொன் குப்பி ரத்னக் குச்சு
[மிட்டு 265
பின்னியிடும் நெற்றிப் பிறையும் திருகுமிட்டுக்
கன்னமதில் வண்டுறையக் கண்டு திட்டி பொட்டு மிட்டு 266
பொட்டழகுக் கேற்க வொரு பொற்பணிதி யிட்ட திருக்
கட்டழகைப்பார்க்க முன்னால் கட்டிவிட்டார் சுட்டியொன்று 267
மாதுக்கினிய செம்பொன் வர்ணமணியாபரணம்
போதக்கலை யெனப் பூட்டினார் நாட்டமுற்றே 268
பொன்னின் குடத்திலொரு பொட்டிட்டுப் பார்ப்பதுபோல்
அன்னமின்னாள் மெய்க்கிசைந்த ஆபரணம் பத்துமிட்டு 269
ஏலக்கருங் குழலிக்கேற்ற முல்லை மல்லிகையும்
கோலமலர் சூடிவந்து கூடினார் சேடியர்கள் 270
ஆதிரத்ன மாதுரத்ன மாண்மைபுரிந்த ரத்னம்
சோதிரத்ன முத்துரத்னஞ் சொல்லுயர் சஞ்சீவி ரத்னம் 271
நல்லமுத்து மாலை குணநாகரிகப் பொன்மாலை
செல்லமுத்து மாலை செயமோகன மாலை 272
நேயவல்லி யோகவல்லி நித்ய வசந்தவல்லி
தாபதிலகவல்லி சேர்ந்த முதற பாங்கியுடன் 273
வாணுதல் மின்னாருடனே மங்கை சிரோரத்னமின்னாள்
வேணமலர் கொய்துவரவேணுமென்று தானடந்தாள். 274
வேடிக்கைச் சென்னிமலைவேலர் புயமாலை மணந்
தேடிமின்னார் கூட செழுங்காவில் சென்றணுகி 275

காண்டாமரை விரும்பக் கைத்தாமரை மலர்ப்பொன்
வண்டாடவண்டு மருண்டாடப் பூவெடுத்தாள். 276
பூவிரவுமல்குல் மின்னாள் பூங்காந்தள் கைமலரால்
தீவிரமாய்ச்சென்று விழி தீவிரம்போல் பூவெடுத்தாள் 277
ஓர் பூவில் மூன்று பூவுற்ற செவ்வி கையில்
ஓர் பூவிலோர் பூ உயிர்ப் பூவைத் தானெடுத்தாள். 278
ஆயிழையாள் பூவெடுக்க அன்புடனே கூட வந்த
சேயிழையார் வெவ்வேறாய்ச் சென்றோடிப் பூவெடுத்தார். 279
மான் போலனம் போல மயில் போல் மதராசகள்
தேன் பாயும் வீடதிரச் சேனை மின்னார் பூவெடுத்தார். 280
தேன்புரிந்த வாய் மாதர் சென்றகல மின் கூட்டந்
தான்பிறிந்த மான் போலத் தனித்து மெள்ளத்தானடந்து 281
மல்லிகை செவ்வந்தி யிருவாட்சி நறுஞ்சாதி சுகம்
முல்லை முறுவல் மின்னான் முல்லை மலர் தானெடுத்தாள். 282
நீர்ப்பூ நிலப்பூ நிறைந்த கொடிப் பூவெடுத்துக்
கோற் றொடிக்கைக் கொம்பனையாள் கோட்டுப் பூ நாட்டமுற்
[றாள். 283
மார்பிரண்டு காலிரண்டு மத்தி முகம் ரண்டு செங்கைச்
சார்பிரண்டு கண்ணிரண்டோர் தன்னுயிர் மெய்ப் பூவிருக்க 284
மெச்சுமனையாளை வைத்து வேறு மனையாளிடம் போ
யிச்சகஞ் சொல்லி யிணங்க மொழி கேட்பவர் போல் 285
ஏந்துமுலைக் கொம்பிடையாளேழையர் போலச் சோலைதனில்
வாய்ந்தமலர் பூத்தமரந்தோறும் வந்து வந்து 286
மைவண்டாடிக் கேட்க மலராத சண்பகமே
கைவண்டாடிக் கேட்கக் கண்டுமலர் தாரீரோ 287
தாழையே மாதுளையே தாழாதுயர்ந்து நிற்கு
மேழை என் தாழ் குழலுக் கேற்ற மலர் தாரீரோ. 288
காதியெனு மாதரென்னைத் தானகன்றார் பாதிரியே
மாதவியே காதகியே வாய்த்த மலர் தாரீரோ. 289
வம்பிட்ட குங்குமமே மன்னு பன்னீர் மாமரமே
கும்பிட்டேன் கொம்பிடைக்குக் கும்பிட்ட மலர் தாரீரோ. 290
வாகிலங்கு மாமரத்தில் வந்திருந்து சஞ்சரிக்குங்
கோகிலங்கா ளெங்களுக்குக் கோதி மலர் தாரீரோ. 291
தேனாடுஞ் சோலை தனில் தேனாடுஞ் செங்கனிக்குத்
தானாடுங் கிஞ்சுகமே தானு மலர் தாரீரோ. 292
ஏந்திழைமின் கூர்ந்த மொழிக் கேங்கிப் பாவையினஞ்
சோர்ந்துருக வெட்கி யந்தச் சோலைப்புற மொதுங்க 293

வெற்றிச் சிரகிரியின் வேலர் மின்னூர் சொல் நிரம்பக்
கற்றவரைக் கற்றோர் கருணையுடன் காண்பது போல் 294
கொத்தாரும் பூஞ்சோலைக் கோலாகல வனத்தின்
வித்தாரம் பார்த்து வடிவேலவ ருலாவும் போதில் 295
கன்னியரு மில்லாமல் கற்பகப் பூம் புன்னை நிழல்
பன்னு சிரோரத்னமணி மாலையெனு மங்கை மின்னாள் 296
தன்னந்தனியாய்த் தனித்து நிற்கும் போதிலெதிர்
பன்னிரண்டு கண் குளிரப் பார்த்தா னறுமுக வேள் 297
சொல்லணங்கோ மாலணங்கோ தோய்ந்தணங்கோ வாமனமணங்கு
செல்லணங்கோ வானவர் கோன் சேருஞ் சசியணங்கோ 298
வானவர்கள் மாதோ வரு நாக மங்கையோ
தானிவளென்றே குறிப்பின் சார்ந்த வினாவில் தெளிந்தான், 299
கார்குழலின் நார் வாடிக் கால் தரையிற்றோய்ந்து கண்வேல்
போர்குழையில் பாய்வதனால் பூதல மின்னாளெனவே 300
சொல்லின் பொருட் கவிஞர் சொற்சுவையின் வாய் மதுரஞ்
செல்லும்வகை மின் செவிக்குச்செவ்வேள் தெரிந்துரைப்பார் 301
உன்னுலகின் பேரே தன்னூரே தன்பேரே தாங்
கன்னிதனை வந்து கண்ட காரியமும் நற்காரியங் காண். 302
பொன்னின் மழை பொழியும் பூந்துறை நன்னாட்டினுயர் உ
செந்நெல் செறி காளி நகர் சென்னிமலை என் மலையாம். 303

## ஆண்டவர் பூங்காவில் சிரோரத்னமணியை சந்தித்து சொல்லுதல்.

பார்த்து மனப் பூர்த்திபெறப் பாவை திருவாயிலொரு
வார்த்தை சொன்னால் தேன் வடிந்து வன்னமுத்தஞ் சிந்திடு
[மோ 304
மாகனக வெற்புவில்லி மாலாக மாலவனார்
மோகினியாய் வந்தணைந்த மோகனப் பெண்ணீர் தாமோ. 305
தேசம்புகழ்ச் சனகன் செல்வியெனும சீராமன்
ஆசைமணமாலையிட்ட அன்ன மின்னாள் நீர் தாமோ 306
நாதமிகும் நான்முகன் பால் நாவிலுறைந்து சதுர்,
வேதமுறை யோதி வைத்த மெல்லியரும் நீர் தாமோ 307
சிந்தைபெருங் கற்பு நிலை தேடிவரு மூவர் தனை
மைந்தரெனச் செய்து கொண்ட மாதர்சி நீர் தாமோ. 308

மேயிரண்டுகண்ணால் விரைந்து மயல் கொண்டு மிந்திரன்
ஆயிரங்கண்ணாக வரு மாயிழையும் நீர் தாமோ 309
கண்ணீறுகண்ட மதன் கண்ணீறு கண்டுவந்து
தணுணார்தவம் புரிந்த தையலரும் நீர் தாமோ 310
வானுலகின் மாது வடிவு கண்டு கை சிவந்து
தானுமலர் வேதனுன்னைத் தான் வருந்திச் செய்தானோ. 311
சைவலத்தைக் கூந்தலிணை சாற்றினால் தாதியர்கள்
கைவளத்தால் கோதிமலர் கட்டி முடியாதே. 312
ஏலக்கருங் குழலை கண்டோங்கு முகில் வான் பறந்து
சோலைப்புறங் கடல் நீர் தோய்ந்து விழுந்தோடியதே 313
செருஞ்சிலையை நுதல் சேர்த்தினால் நாள் தோறு
மாரன்கைச் சாபம் வளைந்து குழைந்ததுவே 314
மால்வலையிற் சிக்கி மருட்டும் விழிக்சேற்கிணை நீர்ச்
சேல்வலையிற் சிக்கினதைச் செப்பினா லொப்பாமோ 315
காவிமலரோ பூங்கணையோ விடஞ்சுனை வாள்
யாவதுவோ கஞ்ச மடயானோ தேன் வண்டினமோ 316
கைவேல் பறந்தஞ்ச வெஞ்சூர்க் காய்ந்தோனின் கண்ணிரண்டின்
மைவேல் பாய்ந்தஞ்ச நெஞ்சமால் காய்ந்துழக்கியதே 317
சொல்லழகின் மூக்கின் முனை சொற்குமிழென்றாற் கனிவாய்ப்
பல்லழகை எட்டி எட்டிப் பார்க்க முத்தந் தூக்காதே 318
கண்ணாடி போலுங் கபோலமென்றாலுண்ணாடிக்
கண்ணாடி முத்தாடிக் காமரசங் காட்டாதே 319
தேடிபிரு காதிணைகள் சேரும் வள்ளை யூசல் விழி
நாடிமத வேள் கலவி நாவி நுனி நாடாதே 320
செஞ்சொலிதழ்ப் பவளஞ் சேர்த்தால சுருளருந்தி
கொஞ்சிமுத்த மிட்டு ரசங்கொள்ள மனங் கொள்ளாதே 321
வட்டமதி என்றுன் முகம் வக்கணை வைத்தால் மதி வான்
பட்டமென நெட்டரவு பாய்ந்து முடல் தேய்ந்ததுவே 322
கள்ளுலவும் பூங்கமுகைக் கந்தரமென்றால் பணியேன்
புள்ளொலியுங் கை நகமும் பூட்டியிதழ் பூட்டாதே 323
வேயிணை தோள்களென விண்டுரைத்தால் பொன் வளையல்
தூயகடகம் பவளந் தொட்டிருக்க மாட்டாதே 324
அம்புயஞ் செங்கை மலர்களாறு விரலும் பவளக்
கொம்பெனவும் வச்ர நகங் கூர்ந்து சுதி கூட்டாதே 325
கூர்ந்தவளைஞ் சென்று பல கோடுறைப் பூத்தேடி வண்டு
சேர்ந்துதிரு வாய் வருந்தித் தேனையிரால் சேர்ப்பது போல 326

## 20 ஆண்டவர் பூங்காவில் சிரோரத்னமணியை சந்தித்து சொல்லுதல்.

பத்துருவ முற்றகட்டின் பங்கயத்துதோன்றி வெள்ளை
வைத்தகொடிப் பூங்கமல மாலின் மனதரும்ப 327
பாக்கின் கனியைப்படைத்துப் பார்த்து சிமிழுக்கிணையோ
பாக்கி எலுமிச்சம் பழத்தை நிறம்பார்த்து 328
பம்பரத்தைத் தித்திவரிப் பங்கஜப் பதித்த திற
அம்புயத்தைக் கைகண்டறிந்து பதந் தெரிந்து 329
கோங்கு கருமபைச் செய்து குறியானைக் கோடணைத்து
தேங்கனி யிராலுதிரந் திரட்டி திறந் தெளிந்து 330
தாளவட்டங் காட்டி மதிதன்னை வட்டங் கூட்டியும் ப்ர
வாளவட்டங் கொண்டு சக்கிரவாள வெற்புந்தானமைத்து 331
பூரணபொற் கும்பம் புனைந்து புகழ் கூறு மத
வாரணத்தின் மத்தகத்தால் வம்பிட்டதை யிறுக்கி 332
மெய்வருந்திக் கைவருந்தி மேருமுலை வெற்பை எந்தை
கைவருந்திச் செனனிக் கமலன் படைத்தானே 333
கூட்டுந் தனைப் பெருக்கங் கொண்டது வட்டிக்கிரட்டி
காட்டுமுலை மேற் கண்கறு கறுப்பை என் சொல்லுவேன் 334
மாருதியும் ராவணன் கார் வண்ணனுமுங்கள் தன
பாரமுலை மேலின் பகையடக்கவே பிறந்தார் 335
மாதரசி ரோமம் வரக்கனுவாய்ச் சந்தெனவும்
போதவரை செப்பினும் போதவரை போகாதே 336
ஆபிலையிருங்கள் வயிறு விலை யென்றால் நெடுமால்
பாயலாயக்கற்றால் பழுத்து முதிர்ந்ததுவே 337
கல்லுஞ் சுழிய மயல் காட்டு மனமால் சுழியைச்
சொல்லுமுங்களுந்திச் சுழிக்குவமை என் சொல்வேன் 338
மின்னேடக் குறுமை வேண்டினால் தானேசிந்து
பொன் மேகலை நான் புனைந் திருக்கப் போகாதே 339
செய்யம் புயத்தானுன் சிற்றிடை நாலுண்டிலை என்
றையம் படைக்க மதனையம் படைத்தானே 340
பொற்புரதமென்றுன்னல்குற் போதித்தால் போககங்
கற்பினிய மெய்புளகக் காம சலம் பாயாதே 341
பூங் கதலிபோல் துடையைப் போதித்தால் மால்வசந்தப்
பாங்கு பெறுமாடவர் கைபற்றி வருடாதே 342
துய்ய முழந்தாள வைவல்றாணிவாரலென்று சொல்லில்
துய்ய கணையால் கருவால் தூண்டியால் சோர்ந்ததுவே 343

கன்னி மின்னேயுங்கள் கண்ணைக்கால் பாடுதேன் கருணை
சொன்னதினால் வன்னச் சுரும்பால் சுருங்கியதே 344

கண்டை திருப்பாதமலர்க்கஞ்சமென்றால் பொன்சதங்கை
தண்டை சிலம்பிட்டு மயில்சாயல் நடைசாராதே 345

முன்னழகும் பின்னழகும் முத்தமிட்டு சேர்வதற்கு
மென்னழகு முன்னழகு மேற்ற திருவழகாம் 346

என்கரவேலுன் விழிவேலென்மயில் போலுன்சாய
லென்கையினால் பேசாதிருந்தாலினிதாமோ 347

கண்ணாரக்கண்டவுடன் காதலரைச் சேர்தல் முதல்
பெண்ணார்முறைமை யென்றும் பேசாதிருப்பதுண்டே. 348

ஆவல்பெருஞ் சம்போகமாடவரி லெண்மடங்கு
பூவையருக் கென்றே புகலுவதும் பொய்யாமோ 349

பேசாதிருப்பதுதான் பெண்களுக்கு மாண்களுக்கும்
ஆசாபாசங்களொன்றே யல்லாதிரண்டுமுண்டோ 350

வலவிரும்போகல்லோ மனமோதான் வேறொருவர்
சொல்விரும்பாதன்னை புத்திசொன்னதோ தோகையரே 351

காமனுக்கு கண்கள்தான் கண்டவிடமெய்பருன்பால்
காமியர்களிவ்வுலகில் கண்டதில்லை கன்னியரே 352

பூவுலகிலாடவர்க்கும் பூவையர்க்குங் காவலிட்டால்
ஆவலிட்ட பேராசை யார்க்குமடங்காதே 353

இத்தனை நேரந்தானிடைப் பாரமேற்றி நின்றால்
மெத்தவுங்கால் நொந்து விதிர் விதிர்த்துக் கொள்ளாதோ 354

பூவென்று பூங்காவில் பூங்கொடியேயென்னை மெள்ள
வாவென்றால் வாய்வலித்து வார்த்தைக்கிடம்படுமோ 355

அஞ்சமுகலஞ்செழுத்து மாறெழுத்து மெட்டெழுத்தும்
விஞ்சை எனும் பெண்கள் மனவிஞ்சை மந்த்ர மேலாமோ 356

பேசுமந்திரங்களெங்கள் பேசாதமந்திரமுங்கள்
ஆசைமந்திரங்களொன்றுக்கு மஞ்சாத மந்திரங்காண். 357

தன்னந்தனிமை கண்டுதன் துணையை மெய்யாகவும் நீ
ரென்னையுங்கண்டுன் மனதிலெண்ண மென்ன கன்னியரே 358

திட்டி தோடங்களெல்லாந் தீரவெண்ணீறு தானிப்போ
கட்டழகாய் வாங்கியிட்டுக் கண்பாரும் பெண்மணியே 359

பாங்குபெறு மான்வேட்டை பற்றிவந்தே னிவ்வனத்தில்
பூங்கொடியைக் கண்டதுமென் பூசாபலன்றான் 360

சத்திவலை கட்டித்துடராமல் வந்தபொன்மா
னைத்தி மெள்ள விட்டகல வென்றால் விடுவேனோ. 361

## 22 ஆண்டவர் பூங்காவில் ஸ்ரீரத்னமணியை சந்தித்து சொல்லுதல்.

பாரமலை யெலாம் பதி படைத்தோனுங்கள் தன
பாரமலை தானொரு கை பாராமல் போவேனோ 362
விள்ளுமதி மதுர மேவுங் கவி மதுரந்
தெள்ளமுத முண்ணத் தெவிட்டாத தேனமுதம் 363
ஞாலமதி லாறு பத்து நாலு விளையாடல் செய்தோன்
பாலன்வடி வேலனுன் பாலில் விளையாடல் விட்டால் 364
வீறுமத வேள் கரண வேதாகம லீலை
யாறுபத்து நாலு வகைப்பாடல் விளையாடேனோ 365
காவேரிவானி கலக்கும் நதியானை யிந்தக்
காவேரிவானி கலக்குமென்று கட்டுரைத்தால் 366
காஞ்சியெனும் நதி கட்டுங் கலைப்பாடி தனில்
வாஞ்சையுடன் சேர்ந்து மருவி விளையாடேனோ 367
பூந்துறை நன்னாட்டி லென்னைப் பொன்னனையீருங்கள் நடுப்
பூந்துறை நன்னாட்டில் புணர்ந்திடச் சொன்னீராகில் 368
வெள்ளோடை யூரென்னெல்லை மின்னே முப்போக முன்பால்
வெள்ளோடை நீரால் விளைவேற்றிக் கொள்ளேனோ 369
எந்தநகையாபுரி தானென்னாட்டில் மன்னுட்டாய்
யுந்தநகையாபுரி தானுள்ளம் வைத்தீராமாகில் 370
பாரிலெழுமாத்தூர் பசும்பொன் மலையத்தனையும்
மாரிலெழுமாத்தூர் மலை முலைக்குச் சூட்டேனோ 371
பிடாரியூர் திக்குடையான் பெண்ணமு தன்பால் மால்
பிடாரியூர் திக்குடையூர் பேச்சு வார்த்தைக் கிசைந்தால் 372
ஈங்கூர் நான் கனிவாயேந்திழை நின் செங்கனி வா
யீங்கூர் தான் கனிவாயேத் நிறைத்துக் கொள்ளேனோ 373
தேடும் பெருந்துறையூர்ச் செவ்வேளுன்பால் கேணி
யோடும் பெருந்துறையூ ரோடம் விடத் தானொருக்கால் 374
சாத்தனூ ராயிரமாந் தையலோரன்றுள்ளம் வைத்தேன்
சாத்தனூ ராதிபத்தியந் தான் கைவசஞ் செய்யேனோ 375
காளமங்கைக் கண்ணனென்றுன் கச்சின்முலைத்தாளமும் வெங்
காளமங்கைக் கன்னியரென் கைவசஞ் செய்தீராகில் 376
குழாநிலைக் கிளாம்பாடிக் கோமானுன்பால் மெய்க்
குழாநிலைக் கிளாம்பாடிக் கூடுங் குறிகூட்டேனோ 377
பூங்குறிச்சி வேந்தனுந் தன்பொன்முலை மேலென் கைமலர்ப்
பூங்குறிச்சி நகப்பட்டு பூண்களபம் பேசேனோ 378

மின்னனு மன்பள்ளியில் செவ்வேள் விரும்பும் வேளைதனில்
தன்னனுமன் பள்ளிச்சயனந்தன்னைக் கொடுத்தால் 379

பழமங்கை என்னூர்தான் பார்வையின் வாய்க்கொவ்வைப்
பழமங்கை மெள்ளப் பருகி ரசங் கொள்ளேனோ 380

காமன் குலவிளக்குக்காக மென்னூர்க் காமியும் பூங்
காமன் குலவிளக்குக்காகு மெனக் கை கொடுத்தால் 381

அரச்சலூர் நாகமலை யாண்டவனுனு மிப்போ
தரச்சலூர் நாகமலை யாண்டார்க செய்யேனோ 382

விளக்கேற்றி வெல்லனுங்கள் விரக வீடதனில் மெள்ள
விளக்கேற்றி நித்த நிதம் மேவி விளையாடேனோ 383

ஈஞ்சநகரா னுன்னிடைக் குதலிப் பொய்கையில் தே
னீஞ்சநக ராட்சியினு வின்பரசங் காட்டி 384

சத்திமங்கை பெற்றவனைத் தானணைந்தால் பெண்ணினுமு
சத்திமங்கை யென்று சித்தந்தனில் வைத்துக் கொள்ளேனோ 385

சேமூரி மாதிபதி சேயே நானுனை மருவ
மாமூரி மாதிபத்தியமாய் நடத்தும் வார்த்தை சொன்னால் 386

மங்கல மாநகரில் வாசன் மதன சுப
மங்கல நாண் பூட்டி மகிழ்ந்தொருகை பாரேனோ 387

வீரநல்லூர் மேவு மயில் வீரனென்னு முங்கள் கர
வீரபத்திர மேவு புயமீதில் வைத்தீராமாகில் 388

ஈரோடை பேரோடை என் கைவச முங்கள் கொவ்வை
ச்சீரோடை பேரோடை எற்றபடி பாரேனோ 389

திண்டல் புது நகரில் சித்திர மயில் சேவகனூர்
திண்டல் வரி எழுதித்தான் வாங்கச் சொல்லீரோ 390

இலகு மலை யானை பிசைந்த மத்மேற்கனிவா
யிலகு மலை யானை யிணங்கச் சகடேற 391

திருவாச்சி முத்தையனின் சேர விப்போது முத்துத்
திருவாச்சி வார்த்தை யொன்று செப்பமனை தொப்பாமோ 392

சொற்பனையம்பள்ளி என்னூர் தோகையுங்க நாகமதில்
உற்பனையம்பள்ளி யுடன்படிக்கை செய்தீர்க்கால் 393

ஓடாநிலையா னுனைக் கலந்து வேறு மன
தோடாநிலைபாக வுள்ளம் வைத்துக் கொள்ளேனோ 394

செப்பு முருங்கைத் தொளுவுஞ்சேர் பூந்துறை நாட்டி
லொப்பும நாவெட்டிரண்டு முன்னுட்டினையாமே 395

மேட்டிமை சேர் முன்பாக்கின் வெற்றிலையும் பூந்துறை சை
நாட்டின் விரிஞ்சி முருகல்லானாறன்பால் செய்யேனோ 396

## 24 ஆண்டவர் பூங்காவில் சிரோரத்னமணியை சந்தித்து சொல்லுதல்.

வேளாண்மையாகவும் நான் வேளாண்மை செய்ய மன
தாளாண்மை யில்லாமல் வையத் தல்லீருன் பாலில் 397
தூயவழகாபுரி சோமந்துரை விலாடபுரி
ராயவேலூர் களத்தூரங்க மலை தாண்டிய பின் 398
தொப்பம்பட்டிக் கணவாய் குளூராலத்தூருக்
கப்பால் குளத்தூரி லரைமா நிலங் கொடுத்தால் 399
காலை விவரங்கள் கண்டு கைவளஞ் செய்தொப்ப மிட்டு
மேலணைப்புங் கீழணைப்பும் விந்தை விந்தையாய்ச் சேர்த்து 400
ஓங்கு நெடுவாள் கலப்பைக் கொண்டிக் கொளுப்பூட்டி நடுத்
தாங்கு கருவத்தடியுந் தனைப் பாய்ச்சி 401
மெட்டியு முத்தாணியிட்டு மெய் மழக்கை மேழியிட்டுக்
கட்டும் புரிக்கயிறு கட்டி முளைப் புள்ளுமிட்டு 402
செம்பொன் மயில் சாயல் நிறம் சேர்ந்த காளை வட்டக்
கொம்பைப் பிடித்துக் குறிப்பாய் நுகங் கழுத்தில் 403
வைத்திறுகக் கண்ணிக் கயிற்றை வாகாப் பூட்டியபின்
மெத்தவுங் கைபற்றி விரைந்து விரைந்தோட்டி 404
பிளந்த படைக்காலில் பின் றுழவு இல்லா
தழுந்தப் பிடித்தேர தட்டியுள் கோலுருவி 405
முந்தேர் தனக்கு முகரை கிட்டக் கட்டி நன்றாய்
பிந்தேருழவு பிசகாமலே கரைந்து 406
விடுதி தனை விட்டு மப்பாள் மேலணைத்துந் தாளுஞ்
சடுதி வெளிடமே சாயாமல் சாயா விழா வகுத்து 407
வாய்ந்த மகனேரிடமநகு சிறந்த கண்ணீர்
பாய்ந்து வயற் சீவிப் பருந்து பரம்படித்து 408
செப்பாருங் கொங்கை மின்னே செந்நெல் விதைத்து நித்தம்
தப்பாமல் முப்போகந் தான் விளைத்துக் கொள்வேனே 409
ஆயிழை யிருங்களிடை யாற்றி வெங்கள் கூடி துறைத்
தூயகொடிக்காற் பயிரின் தோட்டமென்னைப் போடவிட்டால் 410
கால்வாய்க் காலல்குல் நடுக்காலேற்றித் தாமேன்றிச்
சால்வாய் நீரேத்திறைத்துத் தண்ணீர்க் கிடங்கு செய்து 411
எரிட்டுக் கங்கு வைத்து எற்ற குண்டுச் சேர் போட்டு
மாரிட்டுக் கம்பைக் கட்டி மன்னுங் கொடி பதித்து 412
கன்னிப்பயிர் கொம்பேற்றிக் கைகலந்து மேல் படர்ந்து
பின்னித் துவண்டு முளை யேறக் கொழுந்து கிள்ளி 413

மெல்லச் சிறகொதுக்கி வெற்றிலையைத் தான் பறித்து
வல்லமைக் கையாலடுக்கி மார் கிளிக் கோட்டையிட்டு 414
காணியெனு முங்கொள்ள மாகாணிப் பணத்திலெண் மா
காணிப்பணக் கிரயங்கண்டு வைத்துக் கொள்ளேனோ 415
வாலமதன கல்யாண மால் வசந்த மண்டபத்தின்
வேலைசெய்ய வென்னை வரவேணுமென்று நீ யுரைத்தால் 416
செப்புமுனைச் சிற்றுளியுஞ் சேர்ந்த கொட்டிலான கஜக்கோல்
கைப்பழகுந் திட்ப நுட்ப காம சிற்ப சாஸ்திரத்தால் 417
பூமானாற் போற் பொருந்தவு முன்னூல் போட்டு
மாமா நிலத்தி லத்திவார மிசை மட்ட மிட்டு 418
தேங்குஞ் சகதிப்பட்டி சேர்ந்த கண்டங் கட்டு மேட்டாய்
பாங்கு குமுதகமும் பற்பம் மகா பற்பமுடன் 419
நாட்டியிசை கிட்டி நலனூல் வளமொதுக்கி
பேட்டரவி னல்குல் பிளந்த சன்னை கெம்பவதின் 420
சாரமிட்டு மேல் சாந்தைத் தான் பூசி மண்டபத்துள்
சோமுகக் கோமுகையிற் சேர்ந்த துவாரங்கள் விட்டு 421
சித்திர வண்டக்கால் மேல் சேர் போதிகை செலுத்தி
உத்திரங்கள் நாட்டி உயர் பாவு மேல் போட்டு 422
அடி போட்டு நீளமாக நாற்கஜமு மிட்டு
ட்டிபோட்டுக் கட்டிப் பல்கணியின் வாசவிட்டு 423
உளியூன்றி மேலடித்து மோணவரி கோணமல்
பொளிபொளிந்து தாடி வாய்க் குமுத மேலேத்தி 424
தூளிநெடுந் சிகரந் தோன்ற மணிக்கலசம்
மேவுசித்திர மண்டபமுன் மிக்க பிரதிஷ்டை செய்து 425
தங்கு திரு முக்கோண சக்கரத்தின் ரூபனுமென்
னங்கை மணி விங்கமுங்க ளாவுடையாரிற் சேர்த்து 426
அட்ட பந்தனப் பிரதிட்டையாக முறைச் செய்தணைத்துக்
கட்டிக் கனிவாய்க் கனிமலர்த் தேனூட்டி மேன் மேல் 427
தூயமணிச் சங்கந் தொனிப்ப மலர்ச் சேர்க்கையின் மேல்
மேயமயில் விசிறி வீசி யுபசாரமுடன் 428
ஞான மிகுந்த சிவன் ராத்திரி போல் நித்தம் தான்
நானு சர்மம் பூஜை நடத்திக் கொள்ளேனோ 429
பண்புயர் பிடாரியூர்த் தேன் பாம்பின் பிடாரனைப் போலப்
பெண்கொடியி ருன்னுகப் பெட்டி திறந்தாட்ட விட்டால் 430
சிட்டிக்குழல் வாயில் சேர்த்திருகை மெட்டி விரல்
மட்டியும் புன்னகைவராளியுஞ் சககாரி என்றே 431

## 26 ஆண்டவர் பூங்காவில் சிரோரத்னமணியை சந்தித்து சொல்லுதல்.

காலசைத்து சுற்றுங் கலையின் படமொதுக்கி
மேல்விரித்துக் காட்டி மணி விம்மி புளமால் நீர் பொழிய 432
கண்சுழலச் சாய்ந்து முன்பின் காட்டி மனங்கனிந்து
பண்புடன் மேல்தாவிப் பதுங்கிப் பதுங்கி மெள்ளப் 433
பரியினிரு நாவினனி வாய் வெருடக் காதினிசை
பாயவிரு சாரி சுற்றிப் பார்த்து மிடற் புள்ளொலிப்ப 434
கன்னமத வேளின் கரிகர லீலை கரத்தால்
அன்னமின் மால் நாகமிப்பேர் ஆட்டுவிக்க மாட்டேனே 435
மஞ்சாருங் கூந்தல் மடமானே யிப்போது பதி
னஞ்சாங்காரத்தில் விளையாடல் விளையாட விட்டால் 436
முக்கோண வீட்டில் முகடு வெட்டிக் கட்டி விட்டு
மிக்கான மேலக்ராகாரத்தில் மேமேலார் பசுவை வைத்து 437
நெஞ்சை விட்டு மேலேற்றி நேர் தோளின் கீழிரண்டு
மிஞ்சம் புலி நிறுத்தி மேல் புலியைத் தானோட்டி 438
மூலையிடைப் புலியை மோதியங்கே தானெதுக்கித்
காலைப் பிடித்து வெட்டிக் கைகலந்து மாடேனே 439

மாதுரங்கக் கிள்ளை மதன வாசாமனோகராஞ் சேர்
சாதுரங்கம் பார்க்க மெள்ளச் சாதுரிய வார்த்தை சொன்னால் 440
தானையை முன்னோட்டிச் சகடு முகடேற
ஆனையைக் கைப்பற்றி அடர்ந்து பரி மேல் நடத்தி 441
சட்டமதன கரணந்தானெருக்கால் முக்காலுங்
கெட்டி கெட்டி என்று கெலித்து விளையாடேனே 442
கைக்கட்டுஞ் செம்பவளக் கன்னியர் தன்பால் சோகி
சொக்கட்டான் சூதாடச் சொல்லினு லாகாதோ 443
சோலைதனில் கண்டவுடன் சொந்தமெனத் தோய்ந்து மண
மாலையிட வாருமென்று வார்த்தை சொல்லமாட்டீரோ. 444

ஆருக்கடங்கா தனங்கனதி ரூப ரதி
யாருக்கினிய மதனுண்மையோ, பெண்மதியோ 445
பாங்குபெறு மான் வேட்டை பற்றி வந்தேனிவ் வனத்தில்
பூங்கொடியைக் கண்டது மென் புண்ணிய பூசாபலன் காண் 446
வாமச்சிலை மதவேள் மைத்துனனென் பேருலகில்
சாமியர்க்கெல்லாம் தகப்பன்சாமி என்றுங் கேளீரோ 447
மானுக்கு நானு மருகனென்று மேல் மாலின்,
மானுக்கு நீயு மன மிரங்காதென் சொல்லுவேன். 448

மேலுமை சோராறு படை வீடதிபனுன மதவேள்
சேனைப்படை வீட்டிலிப்போ சொந்தமாய்ச் சேரேனே 449
வாவியுறை செங்கமல வாசமலர் தேன்றுளிகள்
ஓவியமே வண்டு கண்டாலுண்ணு தகன்றிடுமே 450
பக்கமதில் நின்று முகம் பார்த்து மொரு வார்த்தை சொல்ல
வெக்கமெல்லா முக்காலும் விட்டு விடு மெல்லியரே 451
கோதை யிருவோர்கள் முன்னங் கொண்ட குடிக்காரனென்றே
பேதையோ பேசப் பெருக்கமோ. பெண்ணரசே 452
இப்படியநேக முன்ன மெங்கள் பெரியோர் நடத்தை
வைப்புலவுங் காந்திருவ மாமணங்கள் தானனந்தம் 453
கோமானுங் கோமானுங் கொண்ட பெரு மானிலங்கைக்
கோயான் மண்டோதரியைக் கூடினதுங் கேளீரோ 454
பேசியநன் மாமனிடைப் பெண்கள் பதினாயிரம் பே
ராசை கொண்டு நித்த மணைந்த தறியீரோ 455
ஆய்ந்த வதிட்டன் புலைச்சி யாயிழையைச் சேர்ந்தான் முன்
வாய்ந்த மச்சகந்தி மணந்தான் பராசரன்றன் 456
ஆத்து மணல்தன்னை யளவிடினு மர்ச்சுனன் மால்
சேத்த பெண்கள் தான் கணக்கில் செப்பமுடியாதே 457
இவர்க்குந் தேவி யழியாத பத்தினியாள்
தெய்வத் துரோபதை மால் செய்மேல் மனம்படைத்தாள் 459
தேவர்முதல் பூவுலகோர் சேயிழையு மாடவரும்
மேவினது தங்களல்லால் வேறொருவர் வார்த்தைகொண்டோ 459
தன்கடலு நேர் மணல் வான் தாரகை யென் காணிலொரு
பெண்கள் மன மொருவரால் பேதிக்கப் போகாதே 460
பேசப் பெரிதெனவும் பேருலகில் பெண்கள் தன் பே
ராசை பெரிதல்லாமல் மற்றியாதும் பெரிதாமோ 461
பேசப் பெரிதெனவும் பெண்களுக்கு மாண்களுக்கும்
ஆசை பெரிதல்லால் மற்றியாதும் பெரிதாமோ 462
மாமனுக்கு மார்பினில் மால் மைத்துனர்க்கு வாயினில் மால்
தாம முடியார் மால் தலைச்சுமையாய்த் தாங்கினனே 463
மண்ணாசை பொன்னாசை மானவர்க்குந் தானவர்க்கும்
பெண்ணாசை கண்டு பிரிந்திருக்கக் கூடாதே 464
உண்டவரை யுண்ண வுபசரித்தாலென்ன பசி
கொண்டவர் தாபந் தீர்த்தால் கோடி புண்யந் தானமே 465
வேண்டி வருவாரை விரும்பாமல் கண்டு மனம்
வேண்டாரை வேண்டி விரும்புவரோ மின்னரசே. 466

எத்திப் பசப்பி மெள்ள ஏய்த்தால் விடுவதில்லை
சத்தியமா யுன்னைத் தழுவ்வது தாலிசந்தான். 467
சென்னிமலை வேலனென்பேர் செய்ய சிரோரத்ன முன்பேர்
என்னு மிருவோர்க் கிசைந்த பொருத்த மென்றே 468
வள்ளி தேவயானை மடமாதிருவர் மத்தியென
உள்ளமதில் தெள்ளிமையா யுன்னை வைத்துக்கொள்ளேனே 469

## ஆண்டவருக்கும் சிரோரத்னமணிக்கும் கந்தருவ மணம்.

ஆசையினால் கூடியணைந்தே சந்தோஷம்
தோகையுமக்குஞ் சுகிர்த பூசாபலன் காண் 470
என்று சென்னிமலை வேலவனாரேந்திழையின் செங்கை தொட
மன்றல மலர்க்குழலாள் வாள் விழியின் நாட்டமுற்றாள். 471
கண்ட கனா கைப்பலன்கள் காண முதல் பாங்கி சொல்லிக்
கொண்டதுவும் பூர்வ புண்ணியங் கூட்டி முடித்ததென்றே 472
தேகம் புளகமிகச் சென்று மயிர்க்காலரும்ப
போகசுகம் பொங்கி மின்னாள் புன்முறுவல் தான்புரிந்தாள் 473
கண்டார்தென் சென்னிமலைக் கர்த்தருமின்னாளுடனே
தண்டலைசூழ் மல்லிகைப் பூச்சார்ந்த கொடி மாளிகைக்குள் 474
தேனும் பாலும் போலத் தெய்வ சிரோரத்னமணி
மானுஞ் சிரகிரிகோமானும் மனமகிழ்ந்து 475.
காங்கயமேவிய கலியாண காரியமாயோடிவந்து
பூங்கொடியாள் தானெடுத்த பொன்கை மலர்ப் பாய்விரித்து 476.
மேலும் ரதிமதன் போலவீற்றிருந்து பொற்கொடியுங்
கோலச் சுருளருந்திக் கோலமலர் தான் முடித்து 477
மன்மதனால் மந்திரவகை எழுத்தை யுச்சரித்து
விண்ணுதல் கண்ணம்பால் விரும்பி மயல் மூட்டி 478
ஆனமுத்தானமுக ஆலிங்கனங் குறிகள்
கானமிசை பானங் கரணங் குறிப்பாராய்ந்து 479
கொஞ்சி முத்தமிட்டணைத்துக் கொங்கை முனைநெருடி.
இன்சொல் மொழியாள் சிற்றிடை மேல் கலை கலைத்து 480
மின்னாக பந்தனத்தின் வேழ நாக பந்தமிட்டு
முன்னாக லீலை முடுகி விரைந்தே நடந்து 481
செம்பவளக் கொம்பிற் செழும் பொற் கொடிகள் பின்னுஞ்
சம்பிரமமுட னசைந்து தள்ளாடுஞ் சித்திரம் போல் 482

முற்றட்டும் பிற்றட்டு மோதி மலர்ப் பாய்விரித்து
சுற்றுமதன் போல கரணத் தோரணைகள் பாராட்டி 483
பங்கயமிரண்டு மொரு பங்கய முகம் படிய
அங்கைவிழியுங் குழையடர்ந்து மிடறுங்குமுற, 484
முத்தணி முலைக்குள் நகமுற்ற குறிதைக்க முகி.
மொத்த மலர் வைத்தசுழுகினுற்ற குழல் பிற்சரிய. 485
தண்ணுதலின் வேர்வைகொண்டு சாரி வந்து வீசுமயில்
நுண்ணிடை நிதானமின்று நூபுரங்களொலமிட 486
சபாசு பளா கெட்டி கெட்டிதானதுவு மேன்மே
லுபாயமடா சாமி யென்று ஒண்டொடி கை கொண்டிருக்க 487
இருவர்மன தொருமைபெறு மினிய பரவசமுபரி
சூரத விதமதன சல ஜாலிகள் குழகுமெனவே 488
ஆகமிரண்டொன்று மனதாவல் கொண்டு மாமோக
தாகமொன்று தீர மத சையோக வைபோகம் 489
செய்து விடாய் தீரச் செழுஞ்சுனை நீர் தான் பருகி
மைவிழி மான் வேலர் மகிழ்ந்திருக்கும் வேளை தனில் 490
காரங்கந்தேடி யடிகாணுதான் செய் வேட்டை
சாரங்கந்தேடி வருஞ் சுவாமி யடிதான் தேடி 491
வென்றிபெறுஞ் சேனையர்கள் மேவு வொலி கூர்ந்து வஞ்
சென்றுவந்து காணு முன்னெஞ் சென்னிமலை வேலவனார் 492
மிக்கபொருடேடிவைத்த வித்தை போல மின்னை வைத்து
தக்கவடி தேடிவருந் தானைக்கெதிரானார் 493

## ஆண்டவர் வேட்டையாடித் திரும்புதல்.

கங்குல் வருமதியங் கண்ட குமுதமெனுஞ்
செங்கை வடிவேலர் வரச் சேனையர் கண்டார்வமுற்றார் 494
வெள்ளைமத வேழமொன்று வேட்டை செய்து கானவர்கள்
வள்ளல்முன்பு கொண்டுவந்த வாரணமேற்கொண்டருளி 495
சோலைவனமகன்று சூழ்ந்த நெடுஞ் சேனையுடன்
தாலமிகுங் காளிநகர் சார்ந்தார் மனங் கூர்ந்தார். 496
சிந்துரத்தின் மீதில் சிரகிரிப் பிரதக்கணமாய்
வந்தார் பவனி வந்தார் வானோர் மலர் சொரிந்தார் 497
கோலாகலப் குமரா வசுரர் குல
காலா பராக் கெனவுங் கட்டியங்கள் தான் கூற 498

கூறு தவில் நாகசுரங் கொம்பு தடாரி பம்பை
மீறு பதினெட்டு வகை மேளவாத்தியந் தொனிக்க 499
வெட்டுங் குடை விசிறி வெண்சாமரையிலங்கக்
கட்டுந் துசமாடக் கையில் தீவட்டி மின்ன 500
துங்கமிகுந் தேவர் தொல்லுலகோர் சூழ்ந்திறைஞ்ச
மங்களங்கள் பாடி மடமாதர் நடமாடி வர 501
செம்பொன் விளக்கை மடவார் சித்திரமணி வீதி தொறு
மம்பொன் மணித்தட்டினில் முத்தாலத்தி ஏந்திவர 502
மான்வேட்டைகொண்டவர் செவ்வாய் வடுவைக்கண்டுபெண்மான்
தேன்வேட்டையுண்டதெனச் செப்புஞ் சிலமடவார் 503
பொற்கலைகள் சோர்ந்து புரண்டு மிருகால் தடுக்க
மற்புயங்கள் பார்த்து வருவார் சிலமடவார் 504
செங்கை வடி வேலர் புயஞ் சேரா தெழும்பார்
கொங்கை எனக் கை பிசைந்து கொள்வார் 505
வாயார வார்த்தை ஒன்று வாவென்று சொல்லி நம்மைத்
தேர்யானோ வென்று துடிப்பார் சில மடவார். 506
கண்முகவேல் கஞ்ச மின்னைக் கண்டகன்று வந்து மனைச்
சண்முகவேள் முன்பு வந்த தையலரைப் பாராமல் 507
தக்கதுணைக் குஞ்சரத்தைத் தாழ்ந்திறைஞ்சி கோபுரப் பொன்
மிக்கதிருச் சன்னதிக்குள் வீற்றிருந்தார் வேலவனார். 508

## ஆண்டவர் பிரிவால் சிரோரத்னமணிக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகள்.

காவணஞ்சூழ் சென்னிமலைக் காங்கய வேளிங்கிருக்க
பூவனத்தில் வீற்றிருந்து பூவை சிரோரத்ன மின்னாள் 509
வேந்தன் குறிஞ்சி வனமேவு வள்ளி தெய்வயானை
காந்தனெனுஞ் சென்னிமலைக் கந்தன் வரக் காணீரோ 510
வானின்மழை காணாது மானிலத்தில் வாழ் பயிர்போல்
மானனையாள் மேனி முகம் வாடி மனந் தளர்ந்து 511
தேங்கிள நீற்றுச் சோலை தேடி சுற்றிப் பார்த்தோடி
பூங்கொடி தன்னிழலடி பொற்கொடியுந் தெண்டனிட்டாள். 512
காஞ்சிமணி கட்டுமிடை கன்னியெனு முன்னில் வரிப்
பூஞ்சிலை வேளம்பு மனப்புண்ணில் கோல் பட்டது போல் 513

கோபித்தாள் வேள்கனமான கொங்கை மலை பட்டுருவி(கி)
சோபித்காளாகந் துடித்தாள் துயரமுற்றுள். 514
பாலேறு வாய்மொழியாள் பங்கயஞ் செங்கை வளைபூங்
கோலேறுங் காமன்' கொடி ஏறு நீர் கொளித்தார் 515
மாவனமே வந்தனமே மாமோக சந்தனமே
காவனமே சென்னிமலைக் காவலனைக் காணீரோ 516
ஆரமே பூமணந்தாரமே யானகன்னி
காரமே வாதனமே.காரணர் வரக்காணீரோ 517
தென்னையே சேர்ந்து பிரிந்தென்னைத் தானகன்றார்
புன்னையே சென்னிமலைப் பொன்னையனைக் காணீரோ 518
காட்டானையே தினமுங் கை தொழுதால் பொல்லாங்கு
நாட்டானை பூந்துறை நன்னுட்டானைக் காணீரோ 519
சீரானைத் தெய்வானை சேர்ந்தானை இவ்வனத்தி
லூரானையே கயலை யூரானைக் காணீரோ 520
கன்மானை யின்பமுடன் கண்டு கலை மானிலங்கும்
பொன்மானே சென்னிமலை வேலவனைக் காணீரோ 521
மாலைவளர் மாமனென வையகத்திலே நீள்பனையே
வேலவனை சென்னிமலைப் பூமானைக் காணீரோ 522
சேதி யநேகங்கள் சொல்லிச் சென்றகன்றாரிவ்வனப்பூம்
போதிய கந்தனை இப்போதில் வரக்காணீரோ 523
ஆறுதலை யானருளு மாறுதலையனுமொரு
தேறுதலை சொல்லாமல் சேர்ந்து பிரிவானே 524
கன்னிமலை யானருளும் கார்த்திகையான் மூவிரண்டு
சென்னிமலையான் காளி சென்னி என்றானே 525
தாட்டிகமாய் நான்கெனக் காதரனிருகாலாறு
நாட்டிலுயர் பூந்துறை சைநாடுடையான் என்றானே 526
வைப்படியுந் தான் மனத்தில் மாறுமலுன்னை என்று சொல்லி
இப்படியுந் தானெனைத்தான் எப்படி விட்டுப் பிரிந்தான் 527
முத்தைய னென்றுன்னி மோகமெனத் தான்மருவ
சத்திய மேன்தான் திரும்பத் தன்னை மறந்தானே 528
காவுலகில் இந்திரனென்னைக்கண்டு மையல் கொண்டுமெள்ள
பூவுலகில் வந்து மந்திரபோக சுகந்தந்தானே 529
தெய்வமணங் காந்திருவந் தேடிவந்து பூங்காவில்
கைகலந்து எந்தன் கருத்துருக்க வந்தானே 530
காமன் தருமறை தான் கண்மறைய காந்திருவர்
காமன் கலையால் மறைத்தால் கன்ற மலர்த்துள் மறைந்து 531

தன்னாறு முடியாறும் தாளிரண்டு கூர்வேலுங்
தண்ணீருண்டு மல்க கையாறிரண்டுமுண்டோ 532
மெச்சு திரு சென்னிமலை வேலரே நான் கண்ட கனு
மச்சமிப்போ சேர்ந்து நெஞ்சமச்ச முன்பின் வேறுமோ 533
நந்தனுடன் சென்னிமலை நாடுவமென்றுனுலகி
லெந்தன் மலை எல்லாம் இருக்கமலை என்றனே 534
அல்லவென்று தேடி அலைந்து சுற்றிப் பார்ப்போமென்றால்
சொல்லியசோகம் பிரகாச சோதிமலை என்றனே 535
விந்தையுடன் கூடிமெள்ள விட்டுப் பிரிந்தமென்றால்
சிந்தைகலங்கி மெள்ளத் தேடி வாமென்றனே 536
வஞ்சமிகு சென்னிமலை வேடன் மலைகித
தஞ்சமெனக் கொஞ்சி தனியே பிரிந்து சென்றனே 537
கள்ளமனது எள்ளளவும் கண்டால் நான் கைகலந்து
கொள்ளமுன் சத்தியங்கள் கூறமல் சேருவேனே 538
தாரொன்று மார்பன் தனைக்கலந்து பின்னுமுன்னூர்
பேரென்றே என்னூர் பிடாரியூர் என்றனே, 539
வாய்ந்தமொழி கேட்டு மருட்டு பிறட்டறிந்தால்
தோய்ந்துமவன் போவோமென்றால் சும்மாவிடுவேனே 540
பித்தன் மகன் மீதில் மனப்பேராசை கொண்டொரு பெண்
புத்தியினு லிப்போ புலம்பித் தவித்தேனே 541
சொல்விரும்பிச் சேர்ந்து மடத்தோகை என்றெண்ணுமல்
வல்விரும்பாய் நெஞ்சம் மறக்கத் துணிந்தானே 542
ஒன்றுக் கிரண்டேரிலோமனுக்கு மூன்றென்றெனவும்
வென்று படி வேல் சொல்ல எனைக் கொண்டானே 543
என்று சொல்லி ஏங்கி மனதெண்ணமுற்று மாதரசி
மன்றல் மலர் கூந்தல் மதி மறந்து மெய் சோர்ந்து 544
இப்படித்தான் கோபித்திவள் கிடக்குமந்நேரம்
கொப்புலவுந் தென்றல் நின்ற கோலமிகும் பூங்காவில் 545
செம்மைமலர் வெவ்வேறாய் சென்றெடுத்த சேடியர்கள்
ஒம்முகமாய்க் கூடி வந்தா ரொண்டொடியைக் காணுமல் 546
வந்தவனமோ வலமோ மறம் சேர் வனமெனுந்தஞ்
சிந்தைகலங்கி நின்று சேயிழையா ரெல்லோரும் 547
காப்பிட்டகை துவர பெண் காரிகை என்றே கதறி
கூப்பிட்டாரோடி வழி கூடினர் தேடியும் பின் 548

தண்டாமரை தடஞ்சூழ் தண்டியிலோர் சுவடு
கொண்டாரது வழியாய்க் கோதையிடம் வந்து கண்டார் 549
நாகமெனத் துவண்டு நண்ணுங்கலை நெகிழ்ந்து
தோகை கிடக்கை கண்டு தோகையர் கைகால் நடுங்க 550
மானுரைக் காணு மருட்சியோ தெய்வக்குறை
தானோ தண்ணீர் சோப தாகமோ மோகமது 551
என்னசொல்வோம் நாமினித்தா னேதுசெய்வோமென் றுமின்னார்
வன்னக்கலை யுடுத்தி மார்பிலெடுத் தணைத்து 552
தேங்குதெள் நீராட்டி திருமுகத்தில் வேர்வை யகற்றத்
தூங்கிவிழித்தவள் போல் சோபமுடன் றனெழுந்தாள் 553
அங்கமது புள்ளி அடையாளங் கண்டு பெண்ணார்
நங்கை ஏதென்ன முகம் நாணித் தலை கவிழ்த்தாள். 554
அன்னைகண்டா லேதுசொல்வ தென்றஞ்சி மெள்ள
மின்னைக் கைலகுவாய் வீட்டுக் கழைத்து வந்தார் 555
வாஞ்ழைக் கூருத்தை மலரணையின் மேல் விரித்து
ஏழை மின்னாள் மால்தலை கொண்டேற மின்னார் தேற்றி வைத்
[தார் 556
வைத்தவுடன் காமவெம்மை மாதுடல் காய்ந்தே மெழுகாய்
முத்துமணி கோர்த்த முன் கை வளையும் முறிய 557
வாய்ந்த முருகர் தரு மையல் மனமுருகக்
காய்ந்து பெருமூச்செறிந்து காமவெள்ளந் தான் பெருகி 558
கும்ப மதவேள் மலை கும்பமலை மீதிலண்ட
அம்புடன் முன்னம்பு தனிலம்புதனைச் சொறிந்தார். 559
ஆரமிட்ட பூமுலையாள் ஆயிழைமார் வேண உப
சாரமிட்டதெல்லாம் விசாரமிட்டுத் தள்ளிவிட்டார். 560
சித்தசவேள் மறை முன்னை சேர்த்தி மன ஊஞ்சலில் பூ
மெத்தையுமேல் தலை தக்க புது மெத்தையினில் வைத்தீரோ 561
மானனையீர் கானமதில் வனக்காஞ்சிரம் பிழிந்து
தேனும்பாலு மென்று சேர்த்துண்ணக் கொடுத்தீரோ 562
சுகியாரமுதச் சுவை கொடுக்கும் எனது சொந்தச்
சகியாரே சிந்தை சகியாரு மானீரோ 563
காற்புலியை வாசற்கதவு திறந்து விட்டு
மேற்புலியைப் பாயுமதை வீசு தென்றலென்றீரோ. 564
தாபமெல்லாந் தீர்ந்து நின்று தான் விசிறி வீச வெயில்
சோபமெல்லாம் கையில் சுருட்டி மெயில் விட்டீரோ 565

## 34 ஆண்டவர் பிரிவால் சிரோரத்னமணிக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகள்.

செவ்வாய் மடவீரென் செப்பு முலைமேல் பூசுஞ்
சவ்வாதும் பன்னீர் தகர நறுஞ் சந்தனமும், 566
பாடுந் தமிழல் பரிசு பெருமல் முகம்
வாடுங் கவிஞர் மனம் போலக் கொதிக்குதென்ருள். 567
கண்மணியாள் தான் புலம்பக் கண்டு மனந்துடித்துப்
பெண்மணியே யென்றெழுந்து பெற்ற தாயோடி வந்தாள். 568
தன்மகளைத் தானெடுத்துத் தாவி மடிமீதில் வைத்து
என்மகளே என்று மன மேறிட்டுத் தான் பார்த்தாள். 569
வாயினிதழ்ப் பற்குறியு மார்பில் முலைக் கைக்குறியும்
தூயவிழி மைக்குறியும் தோய்ந்த முகக்குறியும் 570
வண்டார் குழலிசெய்து வந்த நடத்தை யெல்லாங்
கண்டாள் வெகுண்டு தூணைக் காமியர்மேல் சண்டை கொண்
டாள். 571
இத்தனை பேர்தாமிருக்க வந்திழைமுன் சார்ந்தொருவன்
வித்தகப் பூங்காவில் வந்துவிளைத்தவகை சொல்லுமென்ருள் 572
கூடிவெவ்வேறோடி மலர் கொய்ததுவுங் காவில் மின்னைத்
தேடியதுங் கண்டதுவுஞ் சேடியர்கள் தாமுரைக்க 573
வன்னமுலைப் பாங்கியரில் வாழ் இலதவல்லி சொல்வர்ள்
அன்னையரே கேளீரசுகை* யுற்றேற மேல் வனத்தில் 574
அங்கணுல கெங்கு மரசாளும் துரைசாமிகள் பேரால்
சங்குசக்கரங் கொண்ட சாடைபோல் தீரரைக் கண்டோம். 575
தேவர் தளபதியாம் சென்னிமலை வேலவராம்
மேவி மான்வேட்டை விளையாட வந்தாராம் 576
பூணுமுலையாளுடனே பூவெடுத்தோஞ் சேனை ஒலி
வேணுமுரசொலியும் வேட்டொலியும் கேட்டருண்டோம் 577
குன்றுமுலையாளுடனே கொற்றவனுஞ் சேரிடத்தில்
சென்றவடி கண்டதல்லால் சேர்ந்தவகை காணமென்றூர். 578
கைக்குள் வரும் புண்பார்க்கக் கண்ணாடி தேடி மின்னே
மெய்க்குளொரு பொய்யை விரித்துரைத்துச் சொன்னீரோ 579
பொன்முருகன் கண்டு சும்மா போவானோ சேராமல்
என்மகளுங் கண்டுமப்பால் எட்டியடி வைப்பளோ. 580
அண்டர்க் கமுதளிக்கு மாறுமுக னின்ற
ஒண்டொடியைக் கண்டிதழ்த் தேனுண்ணமல் போவானோ 581

---

* அசுகை—ஐயம்.

மேவுதைப் பூந்தேரேறும் வேலர் வந்தால் சித்திரப்பொன்
பாவையல்லால் தேரேறிப் பாருமென்று சொல்லாளோ 582
காட்டுக்குறக்கொடி மான்கண்டவேழ் நாட்டில் முலைக்
கோட்டுக்குலக்கொடி மான் கொள்ளாதகல்வானோ 583
மனுவுமிந்திரனிந்திராணி மங்கல நாணாபூட்டிவைத்தோன்
கன்னி கண்டு மங்கல நாண் கட்டிவைக்க மாட்டேனோ 584
ஆனாலுமென்னையறியாமல் வேலவரும்
மானாளுங் கூடி மருவி வாக்காரியமேன் 585
ஊர்மாந்தர் செய்த குற்றமுற்றூர்பால் சொல்வதல்லால்
பார்வேந்தர் பாலுரைப்பார் பார் வேந்தர் தான் புரிந்தால் 586
வேண்டியே தெய்வமென்பார் மேதினியில் சென்னிமலை
ஆண்டவனார் செய்தவனை யாரிடத்தில் நாமுரைப்போம் 587
காரியக்காரன் வனுகாரிகை நான் கண்டொரு பெண்வி
சாரணையிற் சொல்லியும் விசாரிக்கத் தானாமோ 588
வீரியஞ்சேர் சென்னிமலை வேலவனார் தான் வேட்டை
சாரிவரும் நீல மலைச்சாரல் வழிதனிலே 589
நன்னயமா யன்னை மின்னை நாடாதே என்று தினஞ்
சொன்னேன் படிப்படியாய் சொன்னதுவுங் கேளாமல் 590
நன்னயமாய் மின்னே நாடாதே யென்று தினஞ்
சொன்னேனப்படி நாயேன் சொன்னதுவுங் கேளாமல் 591
அன்னை சொன்ன புத்திக் கடங்காதவள் மூப்பாய்த்
தன்னரசி னாட்டுரிமைச் சட்டஞ் செலுத்தினளே 592
காட்டு மணப்பூவெடுக்கக் கண்டு வந்ததில்லை மின்னார்
கூட்டு மணப் பூவெடுக்கக் கூடிவந்த தல்லாமல் 593
மைப் பூசுங் கன்னி குறவள்ளியை முன்மணந்த
கைப் பிசகுக் காரனென்று கன்னியறியாளோ 594
தேட்டி விவனயிலூர்ச் செட்டி என்று நாலவேதப்
பாட்டினில் முன்சொன்ன பழமையறியாளோ 595
தேனினஞ்சூழ் சென்னிமலைச் செவ்வேளைச் சேர்ந்த பெண்கள்
தானனந்தம் கோடியென்று சாற்றுவதுங் கேட்டிலையோ. 596
பெண்ணிரண்டு கொண்டவனைப் பேசுவதுங் கண்டு கயல
கண்ணிமையல் கொண்டவனைக் கைகலந்து கொண்டாளோ 597
நாட்டிலிவள் நடத்தை நல்லதென்று சம்மதிக்கத்
தேட்டிலதிக திரவியத்தைத் தேடிவந்தாள் 598
இன்னொருக்கின்னொன்றிணங்க வருமயன்காத்தில்
முன்னெழுத்து முறைமையது தப்பாதே 599

மடலவிழ் பூங்காவில் மடமாதர் பலர் தாமிருக்க
கட்டழகைக் கந்தர்கலந்தது முன் புண்ணியங்காண் 600
பாவெடுத்த செஞ்சொல் மொழிப்பைங் கொடியாள் வந்து [செழுங்
காவெடுத்தாள் பூவெடுக்கக் கண்டு நல்ல தாவெடுத்தாள் 601
ஆவல்கொண்டு நெஞ்சம் நினைந்தாவதென்ன பூவுலகில்
பாவ புண்யமென்னும் பலனெவர்க்குங்கைப் பலன் காண் 602
சொல்லாருஞ் சோலைமலர் தேடி முடித்த பெண்க
ளெல்லாரினு மொருபூ வேறமுடித்தாள் மகள்தான் 603
நங்கைமனதுக் கிசைந்த நாயகனை வேலவனும்
அங்கைவடி வேலவர்க்கு மாயிழையே நாயகியாம் 604
வாயமைகொண்டு பூர்வ புண்ணியம் வாய்த்ததென்று தன்மகளை
தாய்மகிழ்ந்து வாழ்த்தி மனச்சந்தோஷ வார்த்தை சொல்வாள் 605
பூமாலை பொனமாலை பூண்ட சிரோரத்ன மணிப்
பாமாலை கொண்ட சென்னிப்பிடி தன் மீதில் காதல். 606
உனனுந்தனவைசியனேங்கும் ருத்திர பூபனருள்
மன்னுதமிழங்கணான் சொல வாய்ந்த பெருங்கீர்த்தியைப் [போல் 607
தேசமெல்லாங் கொண்டாட சென்னிமலை யாண்டவர்பால்
வாசமுடன் கூடிநித்தம் மைந்தர் பெற்று வாழ்ந்திரென்றாள் 608
உண்மை பெறுந்தாய் வார்த்தை உள்ளங்குளிர்ந்து மிக
வண்மை சிரோரத்னமணி மகிழ்ந்திருக்கும் வேளைதனில் 609
மன்னு திருச்சன்னதியான் வாழ்காஞ்சி மாநதியான்
பொன்னின் கமலாபுரியான் போற்றற்கருள்புரியான் 610
வாச முடியாறுடையான் வானி பொன்னியாறுடையான்
பேசு மருடாசலத்தான் பெற்ற சிகராசலத்தான் 611
மாது சிரோரத்னமணி மங்கைதனைக் கூட்டிவர
வேலர்புயமாலை சிலமெல்லியருந் தானனுப்ப 612

## ஆண்டவருடன் சிரோரத்னமணியின் வாழ்வு.

பொன்சிவிகை பூடணமும் பூவையரும் வாசல்வரும்
அன்பு கண்டாள் மின்னனையாள் சந்தோஷங்கொண்டாள் 613
தாய்மகிழ்ந்து தண்டிகை மேல்தன் மகளையேற்றி வைத்து
வாய்மை திலதவல்லி யாதுடனுங் கூட்டிவிட்டாள் 614

மாது சிரோரத்னமணி மாலை வள்ளி தெய்வ
யானை சிந்தைமகிழ்ந்து திருச்சென்னிமலை யாண்டவனார் 615
சித்தமகிழ்ந்து கண்டு சேர்ந்துதினங்கூடி நல்ல
புத்திரரைப் பெற்றெடுத்தாள் பூவுலகில் வாழ்வு பெற்றாள் 616
வாய்ந்த மறையோர் பெரியோர்மன்னவர் செங்கோல் வாழி
பூந்துறை நாட்டோர்வாழி பூதலத்தோர் தான் வாழி 617
பொன்னின்மலை பெற்ற புதல்வன் கமலாபுரியில்
சென்னிமலை வேலவனார் செந்தமிழ் நூல்வாழியதே 618
ஏழையடியேன் காதல் எழுதினதால் புத்தி வித்தை
பேழை வயிற்றோய் பிரபலந்தா னந்தனுக்கு 619
வேலைக்கு வேலை விவரமுடன் படிப்பவர்கள்
வாழைக்கிளைபோல் வாழ்வார் வளர்புவிமேல் 620

சென்னிமலையாண்டவர்காதல் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ கிருஷ்ண பிரஸ், ஈரோடு.

# விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர் அடியில் காணும் மேல் விலாசப்படி எழுதி பெற்றுக் கொள்ளவும்.

| | ரூ | அ. | ப. |
|---|---|---|---|
| தனி பிரதி | 0 | 4 | 0 |
| ஐந்து பிரதிகள் | 1 | 0 | 0 |

**B. P.** சாம்பமூர்த்தி அய்யர்

கச்சேரி வீதி, ஈரோடு.

**B. P.** சாம்பமூர்த்தி அய்யர் சன்ஸ்,

(டாக்டர் சுப்ரமணியய்யர் வீட்டுக்கெதிரில்)

கச்சேரி வீதி, மயிலாப்பூர்.